# வாழு, வாழவிடு

(பொருளாதாரக் கட்டுரைகள்)

ம.சிங்காரவேலு

NCBH

# வாழு, வாழவிடு

(பொருளாதாரக் கட்டுரைகள்)

ம. சிங்காரவேலு

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்,
6, நல்லதம்பி செட்டி தெரு,
சென்னை-600 002.

முதல் பதிப்பு: டிசம்பர், 1975

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின்

பொன்விழா வெளியீடு

உரிமைப் பதிவு

விலை: ரூ. 1-75

தொகுப்பாசிரியர்கள்:

**வி. எஸ். சுப்பிரமணியம்**

**கே. முருகேசன்**

அச்சிட்டவர்:

நியூ செஞ்சுரி பிரிண்டர்ஸ்,
சென்னை-98.

14 FEB 1976

# முகவுரை

தோழர் ம. சிங்காரவேலு அவர்கள் "புது உலகம்" என்ற மாதப் பத்திரிகையில் எழுதிய கட்டுரைகளின் இரண்டாம் தொகுப்பு இது. இத் தொகுப்பில் பொருளாதார சமூகப் பிரச்சினைகளைப் பற்றி அவர் எழுதியவற்றை எடுத்துத் தொகுத்துள்ளோம்.

இந்தத் தொகுப்பில் சேர்க்கப்பட்டுள்ள கட்டுரைகள் ம. சிங்காரவேலு அவர்கள் தன் பெயரிலும், மற்றும் 'இமாலயதவசி', 'சிந்தனுவாதி', 'கிரிட்டிக்' என்பன போன்ற புனைப்பெயர்களிலும் எழுதியனவாகும். பத்திரிகையின் ஆசிரியராகவும் பதிப்பாளராகவும் இருந்து அவரிடம் கட்டுரைகளை எழுதி வாங்கி வெளியிட்ட பேறு எங்களுள் ஒருவருக்குக் கிடைத்தமையால் கட்டுரைகளைத் தெரிந்து எடுத்தளிக்க இயன்றது.

கட்டுரைகள் 1935, 1936-ம் ஆண்டில் எழுதப் பட்டவை. அந்த சமயத்தில்தான் முதலாளித்துவ அமைப் பானது மிகப் பெரியதான ஒரு பொருளாதார நெருக்கடி யினின்று தப்பித்து, தப்பிப் பிழைக்க முயன்று வந்தது. ஒரு புறம் சோஷலிஸ்டு அமைப்பு சோவியத் யூனியனில் உறுதி யடைந்து, திட்டமிட்டபடி முன்னேறிக் கொண்டிருந்தது. முதலாளித்துவ உலகிலோ தொழில்கள் முடங்கின; பாங்கிகள் பல மூடப்பட்டன; கோடிக்கணக்கான தொழி லாளிகளும் நடுத்தர வர்க்கத்தினரும் வேலையிழந்தனர். உலகெங்கும் இந்த நிலைமைக்குக் காரணமென்ன, முதலா ளித்துவ அமைப்பில் ஏன் இவ்வாறு அடிக்கடி நெருக்கடி ஏற்படுகின்றது, இதனின்று சமூகம் எவ்வாறு விடுதலை பெற முடியும் என்றெல்லாம் பாதிக்கப்பட்ட சமூகப்

பகுதிகள் ஒவ்வொன்றும் சிந்தித்து எவ்வாறு செயல்பட்டது என்பதைப் பற்றி தோழர் ம. சிங்காரவேலு அன்றுடப் பிரச்சினைகளைப் பற்றிய தம் கருத்துக்களை விளக்குகையில் எடுத்துக் கூறியிருக்கின்றார்.

'ரஷ்ய தேசத்தில் வெற்றி அடைந்த 5 வருஷ திட்டத்தின் பயனுக, உலக அரசுகள் ஒவ்வொன்றும் ரஷ்ய திட்டத்தைப் பாவனை செய்ய முயற்சித்து வருகிறார்கள். ஆனுல் ரஷ்ய திட்டத்தின் வெற்றி சமதர்ம அஸ்திவாரத்தின் மேல் கட்டப்பட்டபடியால்தான் நிகழ்ந்தது' என்று குறிப்பிட்டு முதலாளித்துவ நாடுகளில், சமுதாயத்தில் திட்டங்கள் சாஸ்வத பயனளிக்கக் கூடியவை அல்ல என்பதை மே 1935 பொருளாதாரக் குறிப்பிலே ம. சிங்காரவேலு எடுத்துக் காட்டி இருக்கிறார்.

இத்தாலிய நாட்டில் ஏற்பட்ட பாஸிஸ்ட் ஆட்சி முறை ஆப்பிரிக்காவிலுள்ள அபிசீனியாவை ஆக்கிரமித்ததும், அதற்கு உடந்தையாக பிரிட்டிஷ் பிரெஞ்சு ஏகாதிபத்திய ஆட்சியாளர்கள் இருந்ததும், ஜப்பானிய அரசு மஞ்சூரியாவை ஆக்கிரமித்ததும், ஜெர்மனியில் ஏற்பட்ட நாஜிக்கட்சி ஹிட்லரின் தலைமையில் சமாதான ஒப்பந்தங்களைக் கிழித்தெறிந்ததும், பொதுவாக முதலாளித்துவ அரசுகள் குறுகிய தேசீய உணர்ச்சியைப் பயன்படுத்தி போருக்குப் பிரயத்தனங்களைச் செய்துகொண்டு வந்ததையும், சோஷலிஸ்ட் நாடான சோவியத் யூனியன் உண்மையான சமாதானத்துக்காக பாடுபடுவதையும், சோவியத் நாட்டின் வெற்றிகரமான ஐந்தாண்டுத் திட்டத்தைக் கண்டு தாமும் திட்டமிடுவதாக முதலாளித்துவ நிபுணர்கள் திட்டமிட முயன்றது எவ்வாறு அடிப்படையான கோளாறை மூடி மறைக்கும் முயற்சி என்பதையும் இக்கட்டுரைகள் விளக்குகின்றன. தோழர் சிங்காரவேலுவின் எளிய நடையில் இவற்றைக் காணலாம். கம்யூனிஸ்டு தத்துவத்தின் அடிப்படையில் பிரச்சினைகளை விமர்சித்து இக்கட்டுரைகள் விளக்குகின்றன.


அன்றைய நிலையில் சோஷலிஸ்டு வழியிலே வெளிச்சம் கண்டு விளக்கம் பெற்ற தோழர்களைப்போல் இன்றைய நிலையிலும் விளக்கம் காண்பதற்கு தோழர் சிங்காரவேலு அவர்களது கட்டுரைகள் பலருக்கு உதவுமென்று கூறத் தேவையில்லை.

சென்னை,
4-4-75.

வி. எஸ். சுப்பிரமணியம்
கே. முருகேசன்

PUBLIC LIBRARY
14 FEB 1976
MADRAS

CONNEMARA PUBLIC LIB
14 FEB 1976
MADRAS



ம. சிங்காரவேலு

PUBLIC LIBRARY
14 FEB 1976
MADRAS

# பொருளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| | | | பக்கம் |
| 1. | தத்துவ, விஞ்ஞான, பொருளாதாரக் குறிப்புகள் .. | மே, 1935 | 1 |
| 2. | உடைமைப் பைத்தியம் (அப்ஸர்வர்) .. | ஜுன், 1935 | 4 |
| 3. | நமது சந்ததியாருக்கு நாம் செய்யவேண்டிய திருப்பணி (இமாலயதவசி) .. | .. | 11 |
| 4. | பொருளாதாரக் குறிப்பு .. | ஆகஸ்ட், 1935 | 15 |
| 5. | நமது முன்னோர்களுக்கு நமது கடமை (இமாலயதவசி) .. | .. | 17 |
| 6. | லாஸ்கி அம்மைக்கு விடை .. | .. | 19 |
| 7. | அடிமைகள் உலகம் .. | செப்டம்பர், 1935 | 24 |
| 8. | பொருளாதாரக் குறிப்பு .. | அக்டோபர், 1935 | 27 |
| 9. | இனி நமது சந்ததியாருக்கு பிதுரார்ஜிதமென்ன? .. | .. | 30 |
| 10. | மதம் மாறுதலால் பயனுண்டா? (சமதர்மி) .. | நவம்பர், 1935 | 34 |
| 11. | குற்றமும் தண்டனையும் (By Eminent Lawyer) .. | .. | 39 |

12. வாழு, வாழவிடு
(இமாலயதவசி) .. நவம்பர், 1935 44

13. பொருளாதாரம் .. டிசம்பர் 1935-
மார்ச்சு 1936 48

14. வேசித்தனமும்-போக்கும்
மார்க்கமும் (சிந்தனுவாதி) .. ,, ,, 50

15. கல்யாணமென்றால் என்ன?
(By an Eminent Lawyer) .. ,, ,, 54

16. பொருளாதாரக் குறிப்பு .. ஏப்ரல், 1936 58

CONNEMARA PUBLIC LIBRARY
14 FEB 1976
MADRAS

# 1. தத்துவ, விஞ்ஞான, பொருளாதாரக் குறிப்புகள்

## பொருளாதாரக் குறிப்பு

ஒரு காலத்தில் ஆங்கில தேசத்து பிரதம மந்திரியாய் இருந்த லாயிட் ஜார்ஜ்* (Lloyd George) தனது பொருளாதாரத் திட்டமொன்றை சேமித்து. ஆங்கில நாட்டிலுள்ள நெருக்கடியைப் போக்கலாமென்கிறார்.

அவருடைய திட்டத்தின் விபரம் என்னவெனில், புது ரோடுகளைப் போடுவது, காடுகளை விருத்தி செய்வது, கப்பல் துறைமுகங்களை அபிவிருத்தி செய்வது, பயிர் செய்யாமல் அழிக்கப்பட்ட நிலங்களைத் திரும்ப பயிர் செய்வது முதலிய வேலைகளாம்! இவ்வேலைகளுக்கு தற்போது தொழிலில்லாமலிருக்கும் 20, 30 லட்சம் மக்களுக்கு வேலை உண்டாகுமென்கிறார். அவர் சொல்வதுபோல் சில லட்சம் மக்களுக்கு இத்தியாதி வேலைகளில் வேலை கிடைக்கக் கூடும். ஆனால், இவர் திட்டத்தில் ஒரு பெரும் குறை இருந்தே வருகிறது. இந்த வேலைகள் யாவும் முதலாளி வகுப்பாரைக் கொண்டே நடத்தப்படும். இந்த வேலைகளில் விளையும் லாபங்களும்

---

* லாயிட் ஜார்ஜ் (1863-1945): பிரிட்டனில் 'லிபரல்' கட்சியைச் சேர்ந்த தலைவர். 1908 லிருந்து 1915 வரை நிதி அமைச்சராகவும் 1916 லிருந்து 1922 வரை பிரதம மந்திரியாகவும் இருந்தவர். முதல் உலகப் போரின் பிற்பகுதியிலும் அதை அடுத்த சமாதான நடவடிக்கைகளிலும முக்கியப் பங்கு கொண்டவர்.

மிகுதியும் அவர்களே அடையப் போகின்றூர்கள். ரோட்டு காண்டிராக்டர்கள், கட்டிட காண்டிராக்டர்கள், நிலச்சுவான்கள், ரெயில்வே காண்டிராக்டர்கள் மிகுதியான லாபங்களை அடையப் போகின்றூர்கள். இவர் திட்டத்தில் அநேக லட்சம் வீடுகள் கட்டிக் கொடுக்கப் படுமாம்! ஆனுல் இவைகளைக் கட்டிட காண்டிராக்டர்கள் மூலமாக கட்டவிடப் போகின்றூர்கள். **சர் கிரிப்ஸ்*** (Cripps) சொல்வது போல், வேலைகள் யாவும் முதலாளி வர்க்கத்தினர்களுக்கு அனுகூலமாயிருக்குமே ஒழிய, பொதுமக்களுக்கு நிரந்தர ஆதாரமாக இருக்கப் போவதில்லை. இந்த வேலைகளுக்காக புதிய இலாக்காக்களை உண்டாக்கப் போகின்றூர்கள். அந்த இலாக்கா உத்தியோகஸ்தர்களுக்கு ரூ. 1,000, 10,000மாகக் கொடுக்க வேண்டிவரும். இவ்வித பெரும் சம்பளங்கள் ஒரு சிறு கூட்டத்தாருக்கே போகும். இப் புதிய 5 வருஷ, 10 வருஷ திட்டத்தால் ஆங்கில நாட்டிற்கு விசேஷமாக நன்மை விளையப் போவதில்லை. பழைய திட்டப்படி எவ்விதமாக ஒரு சிறுபான்மையோர் லாபத்தின் பெரும்பான்மையை அடைந்து வருகின்றூர்களோ, அதே மாதிரி இந்தப் புதிய திட்டத்திலும் அவர்களே அடையப் போகின்றூர்கள்.

எல்லா நாட்டிலும் இந்தத் திட்டத்தைப் போன்றே பண்டை காலத் திட்டங்கள் யாவும் நடத்தப் படுகின்றன. ஏரிகளை வளைக்கின்றூர்கள்.

---

* சர் கிரிப்ஸ் (1889-1952): பிரிட்டிஷ் தொழிற் கட்சிப் பிரமுகர். சோவியத் யூனியனில் பிரிட்டனின் தூதுவராக 1940-42-ல் பதவி வகித்தவர். இந்தியாவின் அரசியல் சீர்திருத்தத்தைப் பற்றி தலைவர்களை நேரில் கண்டு திட்டம் வகுக்க அனுப்பப்பட்டவர். அவரது தூது வெற்றி பெறவில்லை. இரண்டாவது உலகப் போர் காலத்தில் பிரிட்டிஷ் மந்திரி சபையில் முக்கியமான பதவி வகித்தவர். 1935-ல் பார்லிமெண்டு அங்கத்தினராக இருந்தவர்.

நிலத்திற்குத் தண்ணீர் பாயும்படி செய்கிறார்கள். பெரிய குளங்களை வெட்டுகின்றார்கள். அதன் ஜலத்தை நிலங்களுக்குப் பாய விடுகின்றார்கள். 10,000, 20,000 பேர்களுக்கு அந்தந்த சமயங்களுக்கு வேலை கொடுக்கின்றார்கள். இந்த வேலைகள் முடிந்தவுடன், இவ்வேலைகளை செய்தோருக்கு நிரந்தரமாக வேலை கிடைப்பதில்லை. ஆனால், நிரந்தரமாக யார் நிரந்தர லாபத்தை அடைகின்றார்களென்றால், நிலத்தைப் படைத்த சிறுபான்மையோராகிய நிலச்சுவான்தார்களே. பண்டைக் கால முதல், எந்தப் பண்டை அரசாங்கத்தார் இததியாதி வேலைகளை கட்டாமலிருந்தார்கள். கால்வாய்களை வெட்டினார்கள். தாஜ்மஹாலைப் போன்ற மாளிகைகளை நியமித்தார்கள். கோட்டைகளைக் கட்டினார்கள். கோயில் குளங்களை சிருஷ்டித்தார்கள். இந்த வேலைகள் யாவும் அந்தந்த சமயத்திற்கு சிறுபான்மையோருக்கு அனுகூலமாயிருந்தனவே ஒழிய, நிரந்தரமான பயனை பெரும்பான்மையோர் நிரந்தரமாக அடைந்ததில்லை. அந்தக் கால முதல் இந்தக் காலம் வரை, இவ்வித முதலாளி திட்டங்களால் சாஸ்வதமாக தங்கள் வாழ்வை உயர்த்திக் கொள்ள முடியாமலிருந்து வருகின்றனர். அந்தக் கால வறுமையும் பஞ்சமும் அடுத்தடுத்து இந்தக் கால பெரும்பான்மையோரையும வருத்தி வருவது கண்காட்சி. வேண்டுமானால், **ரூஸ்வெல்ட்*** பெரியார் செய்து

* ரூஸவெலட் (பிராங்க்லின்) (1882-1945): 1932-ல் அமெரிகக ஜனாதிபதியாகத தேர்ந்தெடுக்கப்பட்டவர். மிகப்பெரிய பொருளாதார நெருக்கடியால் பீடிக்கப்பட்டிருந்த காலத்தில் ஜனாதிபதியான அவர் அதினின்று அமெரிக்கப் பொருளாதாரத்தை மீட்பதற்காக 'நியூ டீல' என்ற திட்டமொன்றை வகுத்து நிறைவேற்றியவர். 1936 இலும், 1940, 1944-லும் ஆக 4 முறை ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுககப்பட்டார். பாஸிஸத்தை எதிர்க்கும் அணியில் நின்றவர்.

வரும் மாபெரும் சீர்திருத்தத் திட்டத்தின் பயனால் தெரிந்து கொள்ளலாம். ரூஸ்வெல்ட்டின் மருள் (The Illusion of Roosevelt) என்ற சிறு புஸ்தகத்தை நமது லாயிட் ஜார்ஜ் படிப்பாராயின் தனது திட்டத்தின் முடிவை எளிதில் அறிந்து கொள்ளலாம். ரஷ்ய தேசத்தில் வெற்றியடைந்த 5 வருஷ திட்டத்தின் பயனாக, உலக அரசுகள் ஒவ்வொன்றும் ரஷ்ய திட்டத்தை பாவனை செய்ய முயற்சித்து வருகிறார்கள். ஆனால் ரஷ்ய திட்டத்தின் வெற்றி சமதர்ம அஸ்திவாரத்தின்மேல் கட்டப்பட்டபடியால் தான் நிகழ்ந்தது. மற்ற நாடுகளின் திட்டங்கள் யாவும் முதலாளித் திட்டத்தின் நடுவில் முளைக்கச் செய்வதால் உலக மக்களுக்கு சாஸ்வத பயனின்றி போகின்றன. நெருப்பின் நடுவில் எந்த செடி புல் தழைத்தோங்கும்?

**'புது உலகம்'**
**மே, 1935.**

---

## 2. உடைமைப் பைத்தியம்

(அப்ஸர்வர்)

உலகில் பொருளுடைமை இரண்டு வகைப்படும். ஒன்று தனி உடைமை, மற்றொன்று கூட்டுடைமை. ஆனால் மனிதர்கள் தனி உடைமையையே விரும்புகிறார்கள். கூட்டுடைமைப் பொருள் சிலருக்குச் சொந்தமாயிருப்பினும், அதற்குரிமையாளரெனக் கூறப்படும் ஒவ்வொருவரும் அக் கூட்டுடைமையை தனிமையில் தானே அடைய வேண்டுமென்று

விழைகிறான். காரணம் அவனுக்கிருக்கும் உடைமைப் பைத்தியமேயாகும்.

இந்தப் பைத்தியத்திற்கு எல்லை இருப்பதில்லை. தான் விரும்பியபடி கூட்டுடைமைப் பூராவையும் அடைந்துவிட்ட பிறகும் அவனுக்கு திருப்தி ஏற்படுவது கிடையாது. மேலும் பொருளை ஒன்று, பத்து, நூறு, ஆயிரம், கோடியாக பெருக்கிக் கொள்ள முயல்கிறான். அவ்வாறு பெருக்கிய பின்னரும் அவன் மனம் சாந்தியடைகிறதில்லை. தானன்றி வேறொருவன் சிறிது பொருளுடையவனாயினும் அந்த அயலானின் பொருளையும் தானே அபகரித்து அதற்குத் தானே உரிமையாளனாக விரும்புகிறான். இதுவே தனி உடைமையை விரும்பும் மனிதனின் கோரிக்கையாகும். இத்தகைய பேராசைப் பேயனுக்கு வாழ்க்கையில் ஒருபோதும் திருப்தி ஏற்படாது. அவன் வாழ்க்கை அவலமானதாகவே முடியும். இத்தகைய பேராசையை பைத்தியமென்றல்லாது வேறென்னென்று கூறுவது?

உலகில் ஒரு மனிதனுக்கு தேவையானது மிகச் சொற்பந்தான். தேவைக்கு அதிகமானதை விரும்புவது பைத்தியக்காரத்தனமேயாகும். தனக்கு தேவையான சொற்ப அளவை ஆசியாது (விருப்பங் கொள்ளாமல்) உலகம் பூராவையும் அடைய முயல்வது எத்தகைய கொடூர குணம்!

ஆயினும் இத்தகைய உடைமைப் பைத்தியம் மனித சமூகத்தினிடையே உண்டாகி இருப்பதற்கு, பண்டைக் காலந்தொட்டு இன்று காலம் வரையில், நடைமுறையில் இருந்துவரும் சமூக விதிகளும், நம்பிக்கையின்மையுமே காரணமாகும். இன்றைய சமூக வாழ்க்கையில் ஒருவன் க்ஷணத்தில் ஏழையாவதற்கும், க்ஷணத்தில் கோடீஸ்வரனாவதற்கும் ஏதுவிருக்கிறது. எனவே தனது உறுதியற்ற நிலைமையை எண்ணி ஒவ்வொருவனும் தன் வருங்கால நிலை

மையைப் பாதுகாத்துக் கொள்ள மேலும் மேலும் பொருளைச் சேகரித்துத் தன்னை பலப்படுத்திக் கொள்ள முயல்கிறான். இந்த பட எண்ணத்தோடு பொருளை ஒவ்வொருவனும் அமோகமாகச் சேர்த்து வைத்துக் கொள்ள முயலுகிறான். இந்த முயற்சி நாளடைவில் அவனை பேராசைக்காரனாகவும், உடைமைப் பைத்தியம் கொண்டவனாகவும் ஆக்கி விடுகிறது. எனவே அவன் தனக்கு வேண்டியதையும் வேண்டாததையும் பெருவாரியாக சேர்க்க விரும்பு கிறான்.

இத்தகைய முறை அறிவாளிகளையும் பாதிக்கத் தக்க நிலைமைக்கு வந்து விட்டது. ஒரு அறிவாளி தன் சம்பாத்தியத்தில் தனக்குத் தேவையானதை அனுபவித்துக்கொண்டு மீதியை அயலாருக்கோ அன்றி சர்க்காருக்கோ கொடுத்து விட்டால் நாளைக்கு இவனுடைய பசியைப் போக்க நினைப்பார் யார்? ஒருவருமில்லையே. ஜனங்களும் சர்க்காரும் இவனைப்போல் மனப்பான்மையுடையவர்களாயிருந் தாலல்லவோ நாளைக்கு அவனைக் காப்பாற்ற நினைப்பார்! அப்படிக்கில்லாதவர்கள் தங்களைக் காப்பாற்றிக் கொள்ளவும், வருங்காலத்திற்கு தங்களைத் தயார் செய்து கொள்ளவும் நினைப்பார் களேயன்றி அவனுக்குதவி செய்ய நினைப்பார்களா? ஆகையால் சமூக நம்பிக்கையற்ற அறிவாளிகளும் வருங்காலத்திற்குப் பயந்து உடைமைப் பைத்தியத் திற்கு ஆளாக வேண்டியவர்களாகிறார்கள்.

இதற்குப் பரிகாரம் சமூக வாழ்க்கையின் ஆதாரங்களை சர்க்கார்வசம் ஒப்பவிப்பதேயாகும். அதனால் பொறுப்பேற்றுள்ள சர்க்கார் தன்னைக் காப்பாற்றும் என்ற நம்பிக்கை மனிதனுக்குண்டாகி விடுகிறது. தான் சுகப்பட தன் சகோதரர்களைக் கொள்ளையடிக்க வேண்டுமென்ற எண்ணம் மனித னுக்கு ஏற்பட வழி இல்லை.

ஜன சமூகத்தில் ஏழை பணக்காரன் என்ற வித்தியாசமான ஏற்றதாழ்வு இல்லாதிருக்குமானால், ஒருவனுக்கும் கஷ்டப்பட அவசியம் நேராதிருக்குமானால், பொருள் தேட வேண்டுமென்ற அக்கறை ஏற்பட வழியில்லாது போகுமானால்—அவன் வேலை செய்ய விருப்பமற்ற சோம்பேறியாகி விடுவானென்றும், உலகில் பொருள் உற்பத்தி மிகக் குறைந்து போவதோடு, தற்காலத்தில் உலகம் அடைந்திருக்கிற மாதிரி நாகரீகத்தில் முன்னேற்றமடைய முடியாமல் போய் விடுமென்றும் கூறுகின்றனர்.

இது மனித இயற்கைக்கு முற்றும் மாறான விஷயமாகும். ஏனெனில் உலகில் தற்காலத்தில் ஏற்பட்டுள்ள பெருத்த விஞ்ஞான மாறுதல்களெல்லாம் சிறிதும் தன்னலமற்ற பெரியோர்களாலேயே உண்டானவைகளாகும். நீராவியின் சக்தியைக் கண்டுபிடித்து அதை மனித சமூகத்திற்கு உபயோகமாகும்படி செய்வதற்காகப் பாடுபட்ட **ஜேம்ஸ் வாட்***, காலா காலத்தில் உண்பதையும், உறங்குவதையும்கூட வெறுத்துக் காரியமொன்றிலேயே கவனம் செலுத்தினார். பூமியின் ஆகர்ஷண சக்தியை (Gravity)க் கண்டுபிடிக்த **நியூட்டன்***, சமூக முன்னேற்றத்திற்காக அநேக ஆண்டுகள் வனமேகி தவம் கிடந்த புத்தபெருமான், காந்தத்

---

* ஜேம்ஸ் வாட் (1736-1819): நீராவியால் இயங்கி ரயில் வண்டிகளை இயக்கும் எஞ்ஜினைப் புனைந்தவர். மற்றும் பல இயந்திரங்களையும் கண்டுபிடித்த எஞ்சினியர். ஸ்காட்லண்டு நாட்டைச் சேர்ந்தவர்.

* நியூட்டன் (ஸர் ஐஸக் நியூட்டன்) (1642-1727): ஆங்கிலேய நாட்டு பௌதீக விஞ்ஞானி-உலகப் புகழ் பெற்றவர்-ஆகர்ஷண சக்தி தவிர, பௌதீக இயலின் அடிப்படையான வேறு பல இயல்புகளையும் கண்டு விளக்கியவர்.

தைக் கண்டுபிடித்த **க்ளவன்** ஆகிய மேதாவிக ளெல்லாம் தன்னலங் கருதாமலும், பொருளாசை சிறிதும் இல்லாமலும் அபூர்வ விஷயங்களுக்காகப் பெரிதும் கஷ்டப்பட்டு உழைத்திருக்கிறார்கள். ஆகவே புது புது விஷயங்களைக் கண்டுபிடிப்பதில் நிறைந்த ஊக்கமும் உற்பத்திகளை நூதன முறையில் செய்து பார்க்க மிகுந்த ஆசையும் ஒவ்வொரு மனிதனுக்கும் இயற்கையிலேயே அமைந்துள்ளன. ஆகையால் மேலே கூறிய நொண்டி சமாதானத்தை கொண்டு தனி உடைமையே சரியானதென்று தீர்மானிப்பது தவறாகும்.

அன்றியும் ஒரு சாதாரண கீழ்த்தர உத்தி யோகஸ்தனை-அதே சம்பளத்தில் உயர்தர உத்தி யோகம் பார்க்க நியமித்தால், அவன் அதைச் சந்தோஷத்தோடு ஏற்றுச்செய்ய ஆவல் கொள் கிறான். ஒரு பெரிய காலேஜில் பிரின்சிபால் லீவிலிருக் கும்பொழுது வேறொரு கீழ்ப்பட்ட புரொபசரை (Professor) அவ்வேலையில் தற்காலிகமாய் அமர்த்து வதால் அவர் அந்த வேலையை மிக்க அக்கறையோ டும் சாமர்த்தியத்தோடும் செய்ய முயல்கிறார். ஏனென்றால் அது மனித இயற்கை. வங்காளத்தில் சமீபத்தில் ஒரு மருந்தை பரீக்ஷிக்க நேர்ந்தது. அச்சமயம் அதை உண்டால், தான் இறந்துபடக் கூடும் என்பதை அறிந்தும் அந்த பரீக்ஷைக்காக ஒரு வாலிபன் இசைந்து அம்மருந்தை உண்டு பரீக்ஷையில் அவன் தன் உயிரை இழக்க நேர்ந்தது. இத்தகைய பயங்கர கஷ்டங்களையெல்லாம் பொருட்படுத்தாது மனிதர்கள் பல விஷயங்களில் உழைக்க முன் வந்திருக்கிறார்கள். ஆகையால் தனிவுடைமை அழிவதால் மனித சமூகம் சோம்பேறியாக மாறி பிற்போக்கடைந்து விடுமென்று யாரும் பயப்படத் தேவையில்லை.

ஆனால் உயர்வு தாழ்வு என்கிற வித்தியாசம் நீங்கி, யாவருக்கும் வயிற்றுக்கு ஆகாரமும், அறிவுக்குக் கல்வியும் அளிக்கப்பட்டால் மனித சமூகம் தற்போது இருப்பதைவிட பல்லாயிர மடங்கு முன்னேற்ற மடையும் என்பதில் ஆட்சேபனை இல்லை. பல அறிவாளிகள் தங்கள் வயிறுகளுக்கு உழைப்பதிலேயே தங்கள் ஆயுள்களில் பெரும் பாகத்தையும் செலவழிக்க நேருவதால் உலகத்துக்கு அவர்களால் ஏற்படக்கூடிய பலவித நன்மைகள், ஏற்படுவதற்கு இல்லாமலே போய் விடுகிறது. இதைக் கண்டு வயிறெரிகிற மிஸ்டர் **கிரேயின்*** வாக்கியங்கள் இதை அழகாக விளக்குகிறது. அவர் கூறுவது போல் கோடிக்கணக்கான புஷ்பங்கள் மலராமலும், மலர ஹேதுவில்லாமலும் உதிர்ந்து விடுகின்றன. அப்பேர்ப்பட்ட புஷ்பங்கட்கு மலர சந்தர்ப்பமளித்தால் மானிட வர்க்கம் மென்மேலும் மேன்மையடையுமென்பதில் சந்தேகமென்ன?

ஆகையால் நாம் உடைமைப் பைத்தியத்தை அடியோடு நீக்கி சர்க்காரே சமூக பொறுப்பையும், சமூக வாழ்க்கையின் ஆதாரங்களையும் சாதனங்களையும் கைக்கொள்ளுமாறு செய்ய வேண்டும். அப்பொழுது ஜனங்கள் எல்லா விஷயங்களிலும் சம உரிமை அடைந்து சந்தோஷமடையக் கூடும்.

உடைமைப் பைத்தியத்தால் மக்கள் அடையும் கேட்டிற்கு அளவேயில்லை. ஒரு சிலராகிய முதலாளி வர்க்கத்தினரிடம், பொருள்கள் அதிகரிக்க அதிகரிக்க, பெரும் பகுதியினரான ஏழை மக்களிடம் தரித்திரம் அதிகரித்து அவர்களை வாட்டுகிறது.

---

* கிரேய (தாமஸ் கிரேய்) (1716-71): ஆங்கிலக் கவி. மாதா கோவில் சவஅடக்கப் பகுதியைப் பற்றி அவர் இயற்றிய ஒரு கவிதையில் வரும் வாக்கியங்களை இங்கு ம. சி. அவர்கள் குறிப்பிடுகின்றார்

பணக்காரர்களாகியவர்கள் ஏழைகளை வஞ்சித்து பகற்கொள்ளையடிக்கின்றனர். அவர்களும் தங்கள் சகோதரர்கள் என்பதை மறந்து அவர்களின் கஷ்டத்தைப் பெருக்குகின்றனர். தேசத்துக்காகப் பாடுபடுவதாகக் கூறி அன்னிய தேசத்தோடு சண்டை செய்யத் தூண்டிவிட்டு பின்னிருந்து வேடிக்கை பார்க்கின்றனர். சண்டையிடும் தொழிலாளிகளாகிய ஏழைகள் இருமருங்கிலும் இறந்து போகிறார்கள். யார் ஜெயித்தாலும் பலனடைவது முதலாளி வர்க்கத்தவர்களேயன்றி ஏழைத் தொழிலாளிகளல்ல. உயிர்களை பறிகொடுத்ததுதான் ஏழை மக்களின் லாபம்.

இந்த உடைமைப் பைத்தியமும் அதனாலேற்படுகிற சண்டையும் இப்படியே நீடித்திருந்தால் கடைசியில் உலகமே அழிந்துவிடும் என்பதில் ஆட்சேபணையில்லை. ஆகவே உலக சர்க்கார் உடைமைத் திட்டம் ஏற்படவேண்டும். ஒவ்வொரு தேசத்திற்கு தனித்தனி தேச உடைமை திட்டம் ஏற்பட்டாலும் உலகிற்கு நன்மை ஏற்படாது. ஒரு தேசத்தை மற்றொரு தேசம் விழுங்கிவிட நினைக்கும். வலிமையுள்ள தேசம் வலிமையற்ற தேசத்தைத் தாக்கும். இத்தாலி அபிசீனியத் தகராறும், சீன ஜப்பான் தகராறுமே இதற்கு சான்றாகும்.

ஆனால் பல லட்சக்கணக்கான வருடங்களாகத் தனி உடைமை என்னும் வியாதி மனித ரத்தத்தில் ஊறிப் போய் விட்டமையால் அதை நீக்குவது எளிதான காரியமல்ல. ஆயினும் விடா முயற்சி கொண்டு அதை அடியோடு நீக்க முயலவேண்டும்.

**'புது உலகம்'**
ஜூன், 1935.

---

## 3. நமது சந்ததியாருக்கு நாம் செய்யவேண்டிய திருப்பணி

(இமாலயதவசி)

''புலபுலனக் கலகலனப் புதல்வர்களைப் பெருவீர், காப்பதற்கும் வகை அறியீர், கைவிடவும் மாட்டீர்'' என்ருர் என்னைப் போன்றவோர் தவசி. இவ்வளவு அன்புடன் பெற்றும், தமது அறியாமையால், நாம் ஈன்ற குழந்தைகளை கைவிடுகின்ருேம். ''பிறந்த குழந்தை சாக வேண்டியதில்லை'' என்ருர் ஒரு பிரபல ஆங்கில டாக்டர். பிரெஞ்சு நாட்டில் ஒரு கிராமத்தில், பல வருஷங்களாக பிறந்த குழந்தைகளில் வொன்றேனும் சாகவில்லையாம்! இது இருபது வருஷத்திய சங்கதி, இன்றைய தினத்தில் பல பிரெஞ்சு கிராமங்களில் பிறந்த குழந்தை இறக்காமலே இருக்க வேண்டும்.

பிறந்த குழந்தை வளர வேண்டியதேயொழிய, சாகவேண்டியதில்லை. ஆதலின், எந்தக் காரணத்திஞல் வளர்ச்சி தடைபடுகின்றதோ, அந்தக் காரணங்களைத் தெரிந்து கொள்வோமாகில், குழந்தைகளுடைய மரணத்தைத் தடுக்கலாமன்ருே?

வளர்ச்சியைத் தடைப்படுத்தும் காரணங்கள் யாவை? நெற்பயிரை எடுத்து கொள்வோம். நெற்பயிர் வளர்ச்சிக்கும், மற்ற சகலவுயிர் வளர்ச்சிக்கும், மக்களது வளர்ச்சிக்கும் விசேட வித்தியாசமில்லை என அறிக. உயிரின் வளர்ச்சி, ஒரு சிறு ஓட்டப்பை முட்டையிலிருந்து இரண்டாகி, நான்காகி, பல்லாயிரங்களாகி, கடைசியில் அந்தந்த உயிர்களுக்கேற்ற அவயவங்களுடன் வளர்கின்றன. பலா, கமுகு, தென்னை முதலிய விருட்சங்களாயினும், அல்லது புல், பூண்டு, நெல்லாயினும், எல்லாவித தாவரங்களும், ஒரு சிறு முட்டையிலிருந்தே

பரிணமிக்கின்றன. இதைப் போன்றே குதிரை, யானை, ஆடு, மாடு, மனிதன் முதலிய பிராணிகளும் ஒரு சிறு முட்டையிலிருந்தே வளருகின்றன. எனவே நெற்பயிர் விளைவுக்கும், மனித கரு வளர்ச்சிக்கும் வித்தியாசமில்லை என்றோம்.

நெற்பயிர் விளைச்சலுக்கு என்ன நிலைமை வேண்டும்? நிலம், ஜலம், தேவையான சீதோஷ்ணம் முக்கியமாக நெற்பயிருக்கு வேண்டும். தாவர வளர்ச்சிக்கெல்லாம் இம்மூன்றும் அவசியம். ஆனால், இந்த வளர்ச்சியை தடுக்க சிறுகிருமிகள், பூச்சிகள் இருக்கின்றன. இவ்வித விரோதிகளால்தான், எந்த உயிரும் சாகின்றன. ஆதலின் மரணமென்பதும், சாவென்பதும் சிறு கிருமிகளால் உயிரின் வளர்ச்சி தடைப்பட்ட நிலைமைக்கு பெயர் என அறிக. மேல் மூன்று அவசியங்கள் இல்லாமற்போகுமாயின், அல்லது இவைகள் இருந்தும், சிறு பூச்சிகள் முதலிய விரோதிகளால் வளர்ச்சி தடைப்பட்டாலும் எந்த உயிரும் சாகவேண்டியதே. ஆனால், மேல் மூன்று அவசியங்களும் இருந்து, எந்த விரோதியும் இல்லாமலிருந்தால் நெல் விளைந்தே தீரும்.

அது போலவே, மனிதக் கருவும், அது பரிணமிக்கும் சிசுக்களும், மனிதன் முதலிய பிராணிகளுக்கு வேண்டியது பால் முதலிய உணவுகளும், போதுமான சீதோஷ்ண ஸ்திதியும்தான். இவைகளுடன் வளர்ச்சிக்குத் தகுதியான இடம், அதாவது, கர்ப்பமும் வேண்டும். இவைகள் இருக்கும் வரை கர்ப்பத்தில், குழந்தை கரு சுகமாக பிறந்தே தீரும். பிறந்த பிறகும் இத்தியாதி அவசியங்கள் இருந்தால் பிறந்த குழந்தை வளர்ந்தே தீரும். ஆனால் தாவரங்களுக்குள் கிருமி பூச்சிகளாகிய விரோதிகள் இருப்பதுபோல், மக்கள் பெறும் சிசுக்களுக்கும், கிருமியும் பூச்சியும் விரோதிகளாக

இருந்து வருகின்றன. இவைகளின் சேட்டையிலிருந்து தப்பித்துக் கொண்ட பிள்ளைகள் யாவும் வளர்ந்தே தீருமென அறிக. ஆதலின், பெற்ற குழந்தைகள் சாக வேண்டிய அவசியமொன்றேனுமில்லை. பிறப்பதும் இயற்கை. வளருவதும் இயற்கை. மூப்பும் சாக்காடும் இயற்கை. இதன் மத்தியில் இறப்பது அனாவசியம். எனவே, பிறந்த குழந்தை இறக்க வேண்டியதில்லை என்று ஏற்பட்டது. இதனை விவரிக்க வேண்டில், சிகிச்சையால், மரண விகிதம் குறைவதே நாம் கூறிவந்த விஷயங்களுக்குப் போதுமான அத்தாட்சியாகும்.

நன்ருக போஷித்து வளர்க்கப்படும் குழந்தைகளில், மரணம் குறைவு. வறுமையும், அறிவின்மையும் நிறைந்த குடும்பங்களில் பிறக்கும் குழந்தைகளில், மரணம் அதிகம். ஆங்கில நாட்டில் பிறக்கும் பிள்ளைகளில் 1,000-த்திற்கு பதினொன்றுதான் இறக்கின்றன. ஆனல் நமது இந்திய நாட்டில், பசியாலும் பிணியாலும் வருந்தும் குடும்பங்களில் பிறக்கும் குழந்தைகளில் இறக்கும் குழந்தைகள் ஆயிரத்திற்கு நாற்பது. டாக்டர் வீடுகளில் குழந்தை மரண விகிதம் 1,000-த்திற்கு நான்கே. டாக்டர் வீடுகளில் பிறக்கும் குழந்தைகள் இறக்காமல் இருக்கக்கூடும். ஆனல் நமது நாட்டில் பெண்களின் அறியாமையாலும், அக்கம் பக்கங்களில் மரண விகிதம் அதிகமானதாலும், டாக்டர் வீடுகளிலும் சிசு மரணம் நேரிட்டு வருகிறது. சிசுக்களின் மரண விகிதம் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| இந்தியா | 1000 க்கு | 40 |
| ஆங்கில நாடு | 1000 க்கு | 11 |
| ஆஸ்டிரேலிய நாடு | 1000 க்கு | 9 |
| டாக்டர் குடும்பங்களில் | 1000 க்கு | 4 |

இதனால் ஏற்படும் முடிவு வொன்றே. ஞானமும் பொருளாதாரமும் நிறைந்த குடும்பங்களிலாகிலும், அல்லது நாடுகளிலாகிலும், சிசு மரணம் குறைந்தே வருகிறது. அதாவது, வறுமையும், அறிவின்மையும் நிறைந்த குடும்பங்களிலும், நாடுகளிலும் சிசு மரணம் அதிகப்பட்டே வருகிறது. **ஆதலின் சிசு மரணத்திற்குக் காரணம் வறுமையும், அக்கியானமுமெனு அறிக.** தலைவிதி என்பதும், அதற்குக் கால முடிவு என்பதும், அவ்வளவுதான் நாம் கொடுத்து வைத்தோமென்பதும், கடவுள் பாதாரவிந்தத்தில் போய்ச் சேர்ந்தது என்பதும், கொடுத்தவன் பெற்றுக் கொண்டானென்பதும், அவனருள் என்பதும், அவன் அன்றி ஓர் அணுவும் அசையாதென்பதும், சோம்பேறிகள் சொல்லும் சொற்களாகும். இனிவரும் சந்ததியாருக்கு நாம் செய்ய வேண்டிய திருப்பணி என்னவெனில், பிறக்கும் குழந்தைகளை சாகவிடாமல் காப்பதே முதற் பணியாகும். இதனை பொருளாதார உயர்வாலும், ஞானத்தாலும் செய்து கொள்ளலாம். ஆனால் கர்ப்பத்தடையால், சிசு மரணத்தை குறைக்கலாமென்பார் சிலர். வீணான வீணர்கள் பேசும் பேச்சு. இதனை இன்னொரு முறையில் எடுத்துரைப்போம்.

**'புது உலகம்'**
ஜூன், 1935.

# 4. பொருளாதாரக் குறிப்பு

## உலக கஷ்டம்

உலகம் சீர்பட்டதாகத் தெரியவில்லை. மகா யுத்தத்திற்குப் பின் நாலைந்து வருஷங்களாக, யுத்தத்தின் பயனை சில தேசங்கள் அனுபவித்து வந்தன. ஆனால், உண்மையில் கடன்காரன் வட்டியைக் கொடாமல் முதலைக் கொண்டு சீவனம் நடத்தி வருவது போல் ஜெயங்கொண்ட தேசங்கள், யுத்தத்தின் பயனாக நின்ற முதலைக் கொண்டு அன்றாட செலவுகளை நடத்திவந்தனர். கடன்காரன் எத்தனை நாளைக்கு வட்டியும் கொடாமல், முதலை செலவழிக்க முடியும்? மகாயுத்தத்தின் பிறகு உலகம் செல்வாக்கை அடைந்ததாகச் சொல்கின்றார்கள். தோல்வியுள்ள (யுற்ற) நாடுகள் ஒரு பக்கம் இருக்கட்டும். ஜெயங்கொண்ட நாடுகளின் கதி என்னும்?

பலகோடி ஆண்மக்கள் உயிரையும், வலிமையும், யவ்வன வயதையும் இழந்தனர். பிரெஞ்சு தேசம், பெல்ஜிய நாடு, இத்தாலி தேசம் முதலிய வெற்றி கொண்ட நாடுகள் இடிந்த, நாசமான பட்டணங்களைக் கட்டவே, தங்கள் செல்வாக்கு முழுமையும் செலவிட்டன.

ஆங்கிலேய நாடு, 700 கோடி கடன்பட்டிருந்ததிலிருந்து, 7000 கோடி கடன் வாங்க நேரிட்டது. வட்டியே 400 கோடிக்கு மேல் வருஷா வருஷம் கட்ட நேரிடுகிறது.

தோல்வியுள்ள (யுற்ற) நாடுகள், தங்கள் வயிற்றைக் காப்பாற்றவே முடியாமல் போயிற்று; சண்டையால் நேரிட்ட பகுதிப்பணம் கட்ட சக்தியற்றவர்களாயினர். ஜெர்மனி, ஆஸ்டிரியா, இத்தாலி, ருமேனியா முதலிய நாடுகள் அமெரிக்க

ரிடம் வாங்கின கடனைக் கொடுக்க முடியாமல், தேசீய இன்ஸால்வெண்டாயின. இந்த நிலைமையில், உலகில் உண்டான பொருள்களை வாங்க முடியாமல் போகவே, உலக முழுமையும் வேலை இல்லாமல் போயிற்று. இதுதான் உலகிற்கு வந்த நெருக்கடி. உலக முழுமையும் ஜெயித்த ஊரிலும், தோற்ற ஊரிலும், வேலை இல்லாமையால் கோடிக்கணக்கான மக்கள் சோம்பித் திரியவும், அதனால் அதிருப்தி கொள்ளவும், குழப்பங்கள் செய்யவும் நேரிட்டது.

அந்தந்த நாடுகளில், அயலார் சாமான்களுக்கு அதிக வரியை (Tariffs) விதித்து தங்கள் தங்கள் சாமான்களை விலைபடும்படி திட்டங்கள் செய்வதனால், இதனாலாகிலும் தங்கள் நாட்டை பிடித்தாட்டும் வறுமையும், வேலை இல்லாமையும் ஒழிந்ததா? அதுவும் இல்லை. தங்களூர் பொருள்கள் அயல் ஊர்களுக்கு ஏற்றுமதியாகினாலன்றோ (Exports) தங்கள் ஊர் விளைபொருளும், செய்பொருளும் விலையானதாகும். அப்படி விலையாகாமற் போனால், ஊர் எவ்வாறு க்ஷேமமடையும்? கொதிக்கின்ற பாலில் இருந்து நெருப்பில் விழுந்த மாதிரி உலக நாடுகள் முழுமையும், சில சந்தர்ப்பங்களில் நேர்ந்த வேலை இல்லாமை, தீராத வியாதி, (Chronic) அதாவது, நாட்பட்ட வியாதியாய்விட்டது.

இதிலிருந்து தப்பித்துக் கொள்ள, ஹிட்லரிஸம் என்றும், பாஸிஸமென்றும் மருந்துகள் உண்டாய் வருகின்றன. ஆனால், இந்த மருந்துண்ட தேசங்கள், வைகுண்ட யாத்திரைக்கு தயாராகின்றன. போரை கிளப்பியாகிலும், இந்த நெருக்கடியைப் போக்கலாமென்று சில நாடுகள் போர்க்கோலம் கொள்கின்றன. அந்தந்த தேச வறுமையைப் போக்க, யுத்தத்தை கிளப்புகின்றார்கள். ஆனால் யுத்தத்தால் வறுமை அதிகரிப்பதை மறந்து விடு

கின்றனர்! இந்த **Vicious Circle** லில் அதாவது, இந்தத் துன்மார்க்க வட்டத்தில் சுழண்டு, சுழண்டு வருகின்ற வல்லரசு, சிற்றரசுகளின் கதி என்னும்!! இதனை சான்றோர் சிந்திப்பாராக!

**'புது உலகம்'**
*ஆகஸ்ட், 1935.*

---

## 5. நமது முன்னோர்களுக்கு நமது கடமை

**(இமாலயதவசி)**

நமது சந்ததியாருக்கு நாம் செய்ய வேண்டிய கடமை ஒரு பக்கமிருக்க, நமது முன்னோர்களுக்கு நாம் செய்யும் பணியைப்பற்றி சற்று விசாரிப்போம். மதக் கற்பனைகளால் சில பணிகளை நமது முன்னோர் களுக்குச் செய்து வருகிறோம். அவையாவன: அவர்கள் வணங்கும் தெய்வங்களை நாமும் வணங்கு வது ஒன்று. இதனை மூடபக்தி என்பர் அறிஞர். இந்த மூடபக்தியை வளர்ப்பதால், நமது முன்னோர் களை மரியாதை செய்ததாக ஏற்படாது. நேற்று லாகூரில் நடந்த குழப்பத்தால் நமது முன்னோர் களுக்கு நாம் செய்யும் திருப்பணியாகா. நம்மை ஈன்றோர் இன்றையதினம் விழித்துப் பார்ப்பார் களேயாகில் நாம் செய்யும் மூட பக்தியைக் கண்டு நம்மை என்னவென்று மதிப்பார்கள்? **Fighting with Cats and Dogs** என்பார், நமது முன்னோர் கள். அதாவது நாயும், பூனையும் சண்டையிடுவதைக் கண்டு நமது பெரியோர் இத்தியாதி நடவடிக்கை களை கண்டித்தவர்; நாமும் நாய்களைப் போலவும்,

பூனைகளைப்போலவும் சண்டையிடுவதைக் கண்டால் நமது முன்னோர்கள் மனம் எப்படி திடுக்கிடும்! நம்மை ஈன்றோர் நாய்களல்ல. அவர்கள் மனித மக்கள். மனித மக்களுக்குப் பிறந்த நாம், மிருக ராசிகளைப்போல் நடந்தால் அவர்கள் மனம் புண்ணுவதற்கு என்ன தடை?

அவர்கள் இறந்தநாளை குறிப்பிட்டு திதி, தர்பணம் முதலியவைகளைச் செய்கின்றோம். இது என்ன திருப்பணி என்று கேட்கிறோம். தண்ணீரை வாரி இறைப்பதால் அவர்கள் மோக்ஷம் போவார்களென்றால், தண்ணீரில் அனுதினம் வாழும் மீன்களும், தவளைகளும் மோக்ஷத்திற்கு அருகராவர்களென்றோ? இது ஆபாசமான காரியம். அவர்களுக்கு நாம் செய்ய வேண்டிய காரியம் ஒன்றிருக்க, அவர்கள் நகைப்பிற்கு நாம் பாத்திரமாகும்படி நாம் நடப்பது என்ன மடமை?

நமது முன்னோர்களுடைய கோரிக்கை என்னவெனில் நாம் அவர்களின் நடத்தைகளைப் பின்பற்ற மாட்டோமா என்றுதான் தங்கள் கண்களை மூடிச் சென்றார்கள். அவர்கள், அதாவது நமது முன்னோர்கள் நமது நாகரீகத்தை உண்டாக்கியவர்கள் தழைகளை போத்திக்கொண்டு நாடோடிகளாகச் சென்றவர்கள் பஞ்சாடையும், கம்பளங்களையும் உடுத்தச் செய்தனர். தினமொன்றுக்கு மூன்று மைல் நடக்க முடியாதவர்கள் மணி ஒன்றுக்கு இருபது, முப்பது, முந்நூறு மைல் போகும்படி செய்தனர். அழகான கட்டிடங்களையும், சிற்ப வேலைகளையும், நாடு நகரங்களையும் உண்டாக்கியவர் நமது புராதன முன்னோர்களே. கொடூர மிருகங்கள் வாயில் நாம் அகப்பட்டுக்கொள்ளாமல் அம்பையும், வில்லையும், துப்பாக்கிகளையும் கண்டுபிடித்தவர்கள் அவர்களே. பலவித நோய்கள் நம்மை

வருத்தாமல் சுகாதார முறைப்படி நடக்கச் செய்தவர்கள் நமது முன்னோர்களே. நமது ஆயுளை விருத்தி செய்தவர்களும் அவர்களே. ஆயிரம் பேருக்கு போதுமான உணவை உண்டாக்க சக்தியற்ற நிலத்தை லட்சம் பேருக்கு உணவை உண்டாக்கும்படி செய்தவர் நமது மூதாதைகளே. வெள்ளங்கள் நம்மை அடித்துப்போகாமல் அணைகளை கட்டியவர்களும் அவர்களே. பத்துப் பதினைந்து குடும்பங்கள் வசிக்கத் தகுதியற்ற கிராமங்களை லட்சம், பத்துலட்சம் குடும்பங்கள் வசிக்க பட்டினங்களையும், நகரங்களையும் ஏற்படுத்தியவர்களும் நமது முன்னோர்களே. இவர்களுக்கு செய்ய வேண்டிய கடமை என்ன? அவர்கள் செய்து வந்த இத்தியாதி காரியங்களை நாம் அதிகரிக்க வேண்டியதன்றோ? இன்றிருக்கும் உலகை ஒருபடி உயரவைக்க வேண்டியதே நமது முன்னோர்களுக்கு நாம் செய்யவேண்டிய கைமாறாகும்.

**'புது உலகம்'**
*ஆகஸ்டு, 1935.*

---

## 6. லாஸ்கி அம்மைக்கு விடை

(இக்கட்டுரை தோழர் **எஸ். இராமநாதன்***, எம். ஏ.பி.எல். அவர்களின் **'ராஷனலிஸடு'** (Ratio-

---

* எஸ். இராமநாதன் (1896-1970): தமிழ் நாட்டுக் காங்கிரஸில் பல ஆண்டுகள் பணியாற்றியவர். அ. இ. நூற்புக் கழகத்தின் காரியதரிசி. கதர் பிரசாரத்தில் ஈடுபட்டவர். பின்னர் சிலகாலம்

nalist) பத்திரிகைக்கு எழுதினது. அவ்வாராந்திரப் பத்திரிகை நின்றுவிட்டபடியால் ஈண்டு அதனை பிரசுரித்தோம்.)

இந்திய மக்களின் வறுமைக்கு முக்கிய காரணம் பொருளாதாரக் குறைவென்று பலமுறை வற்புறுத்தி வந்திருக்கிறோம். பிறப்பு அதிகமாயும், அதனோடு மரணமும் அதிகமாயும் வருவது இந்தியர்களுடைய வறுமையாலென அறிதல் வேண்டும். இந்தியத் தாய்மார்களின் பலவீனத்திற்கும் இவர்களின் வறுமையே காரணமாகும். இந்தக் கொடிய வறுமையைப் போக்கவும், அதன் மூல காரணங்களையும் நீக்காமல், சமயோசித யோசனைகளாகிய கர்ப்பத் தடை, கிராம சீர்த்திருத்தம், ஹரிஜன சேவை முதலியவற்றால் அகால மரணங்களையும், சிசுக்கொலைகளையும், கரு அழித்தலையும் இந்தியாவில் தடுக்க முடியாதென அறிதல் வேண்டும். ஆதலின் பொருளாதாரக் குறைவு, கோடானகோடி இந்திய மக்களை ஒழியாத வறுமைக்கும் சாஸ்வத இல்லாமைக்கும் ஆளாக்குகின்றதெனவும், இந்தத் தாழ்வான பொருளாதார நிலைமையே அபரிமிதமான சிசு மரணத்திற்கும், தாய்மார்கள் அகால மரண வேதனைக்கும் உட்படுத்துகின்றதாக **'ராஷனலிஸ்டு'** பத்திரிகையில் லாஸ்கி அம்மையார் குறிப்பிட்டிருப்பதை வரவேற்கின்றோம்.

இந்த அம்மையாரின் அபிப்பிராயம் இதுவரை போற்றத்தக்கதே. ஆனால், இந்த அம்மை இன்னொரு விஷயத்தையும் குறிப்பிடுகின்றார்கள். அதாவது, இந்திய ஜன நெருக்கமும், விவசாயத் திட்டமின்மையும் இந்திய மக்களுடைய வறுமைக்கு

பெரியார் ஈ. வெ. ராவுடன் சுயமரியாதை இயக்கத்தில் இருந்து, அவருடன் ருஷ்யாவுக்கும் சென்று வந்தவர். 'பகுத்தறிவு' இயக்கத்தில் தீவிரப் பங்கு கொண்டவர்.

காரணமென்கிறார்கள். முடிவில், இந்திய மக்களுடைய வாழ்வை உயர்த்தவும், அகால மரணத்தால் உண்டாகும் நஷ்டத்தை நாம் தடுக்கவும் இந்திய மக்களுக்கு கர்ப்பத்தடை ஞானத்தை தெரிவிக்க வேண்டுமென்று கூறுகின்றார்கள்.

இந்த யோசனை சில ஐரோப்பிய பகுத்தறிவாளர்கள் பாலும், **நவ மால்தூஸர்கள்*** பாலும் வழங்கி வருகின்றது. ஆனால், இதுவோர் பெருத்த தப்பு எண்ணம். இந்தியர்களுடைய ஜன நெருக்கமே அவர்களுடைய தரித்திரத்திற்கு முதற்காரணமென்பது பெருத்த தவறு. இந்தியநாடு, மற்ற நாடுகளைவிட ஜனப்பெருக்கை கொண்டது என்பதும் சரியல்ல. இந்தியாவில் உண்டாகும் உணவு, அதிகரித்து வரும் ஜனத்தொகைக்கு போதாமை என்பதும் முற்றிலும் உண்மைக்கு எதிர்மறை.

இத்தியாதி யோசனைகள், உத்தியோக முறையில் ஈடுபட்டுள்ளவர்களிடத்தும், முக்கியமாக முதலாளி மனப்பான்மை கொண்டவர்களிடத்தும் காணலாம். அந்த அபிப்பிராயத்தை லாஸ்கி அம்மையும் கொண்டுள்ளது ஆச்சரியமல்ல. கர்ப்பத்தடையாளர்கள் கொண்டுள்ள இந்தத் தப்பு எண்ணங்களை எடுத்துக் காட்ட, சில வர்த்தமானங்களை இங்கு குறிப்பிடுகின்றோம். இதனை வாசித்தாலும் கர்ப்பத்தடை வாதிகள் கூறும் கூற்றை, நமது பகுத்தறிவாளர்கள் தக்கபடி விலை மதிப்பார்கள் என்று இதனை வரைந்து காட்டுகின்றோம்.

---

* **நவ மால்தூஸர்கள்** மால்தஸ் என்ற பிரிட்டிஷ் பொருளாதார நிபுணர். (1776-1834): ஜனத்தொகை வாழ்வுக்குத் தேவையான பொருள்களின் அபிவிருத்தியைவிட வேகமாக பெருகுகின்றது என்றும், ஆகவே ஜனத் தொகையைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று கூறியவர். அதைப் பின்பற்றி குடும்பக் கட்டுப்பாடு செய்ய வேண்டுமென்று கூறிய பகுதியினர் நவ அல்லது நவீன மால்தூஸியர்கள்.

1. ஆங்கில அரசாட்சிக்குட்பட்ட இந்திய நாட்டில், ஜன விருத்தி மற்ற நாடுகளைவிட குறை வென்று காட்ட இந்தக் கணக்கால் அறிந்து கொள்ள லாம். இது 50 வருஷத்தின் கணக்கு.

| தேசம் | 100-க்கு எவ்வளவு விருத்தி. |
|---|---|
| இந்தியா | 18—9. |
| ஆங்கில நாடு | 58—0. |
| ஜெர்மனி | 59—0. |
| ரஷ்யா | 73—9. |
| சராசரி ஐரோப்பிய நாடுகள் | 45—4. |

ஆதலின் மற்ற நாடுகளைவிட, நமது நாட்டில் ஜனவிருத்தி மிகவும் குறைவே.

2. நமது இந்தியாவில் ஜன நெருக்கமும் மற்ற நாடுகளுக்கும் குறைவு.

| தேசம் | சதுர மைலுக்கு ஜனநெருக்கம். |
|---|---|
| இந்தியா (1921) | 177. |
| ஆங்கில நாடு | 650. |
| ஜெர்மனி | 332. |
| பிரான்ஸ் | 184. |
| பெல்ஜியம் | 666. |
| ஜப்பான் | 400. |

சுருக்கமாக சொல்ல வேண்டில், "இந்திய நாட்டின் ஜனத்தொகை" என்ற புதிய நூலில் (The Population of India) உண்மையாகவே, இந்தியாவில் கடந்த 30 வருஷத்திற்குள்ளாக, உண்ணும் உணவு, ஜன விருத்தியைவிட அதிகரித்ததாக, பிரிஜ் நாராயண் என்ற அதிகாரி வரைந்துள்ளார். இதனை தெரிந்து கொள்ளாமல், நமது கர்ப்பத்

தடைவாதிகள் இந்தியாவில் உணவு போதவில்லை என்று மேடைகளிலிருந்து கதறுவது என்ன காரணம்? ஏன் போதவில்லை? இந்தக் கேள்வி தவறு. சரியான கேள்வி என்னவெனில், ஏன் கிடைக்கவில்லை? இதற்கு சமதர்மிகள்தான் சரியான விடை கொடுக்க முடியும். ஏனெனில் போதுமான விளைவுவிளைந்ததும், விளைந்த உணவை உண்ணவிடாமல் விற்பனை செய்தும் வருவதால், வறுமையும், பஞ்சமும் இந்திய நாட்டிலுமல்ல; உலக முழுமையும் நிறைந்துள்ளது. சிறந்த பொருளாதார நூலாசிரியோராகிய **பால்ம தத்தர்*** என்ற வங்காள பெரியார், இதன் மேல் உரை எழுதுங்காலை, இதனால் என்ன புலப்படுகின்ற தென்றால், உண்டாகும் உணவு, விருத்தியாகிக் கொண்டே வரும் ஜனங்களுக்கு போதுமா என்ற கேள்வியே இல்லை; தற்காலத்தில் வழங்கிவரும் முதலாளித்துவ திட்டமே, அபிவிருத்தி அடைந்து வரும் ஜனங்களுக்கு உணவு போதாமைக்குக் காரணம் என வரைந்துள்ளார்.

இவ்விஷயங்களைப் படித்தாகிலும், நமது கர்ப்பத் தடைவாதிகள், தங்கள் வாதத்தை மட்டுப்படுத்தி, ஏழை மக்களுக்கு உண்டாகும் உணவு வேண்டிய அளவு உதவும்படி உழைத்துவரக் கோருகின்றோம்.

**"புது உலகம்"**
ஆகஸ்டு, **1935.**

---

* பால்மதத்தர் (ரஜனி பால்ம்தத்): இங்கிலாந்தில் பிறந்து வளர்ந்த இந்திய அறிவாளி. பிரிட்டிஷ் கம்யூனிஸ்டு கட்சி ஸ்தாபகர்களுள் ஒருவர். மார்க்ஸிஸ் கண்ணோட்டத்தில் இன்றைய இந்தியா என்ற நூலை எழுதியவர்.

# 7. அடிமைகள் உலகம்

இன்றைய நாகரீக உலகத்தில் அடிமைகள் இல்லையென்பது பல்லோருடைய கருத்து. இது மிக தவறான எண்ணம். கீழ்க்காணும் விஷயங்களைக் கொண்டேனும் வாசகர்கள் உண்மை நிலையை உணரவேண்டுகிறோம்.

இன்றைய தினம் அநேக நாடுகளில் அடிமை வியாபாரம் இருந்து வருகிறது. ஆங்காங்கு மக்கள் பலவந்தமாகக் கட்டுப்படுத்தப் பட்டு வாழ்க்கை முழுவதும் அகோர நிலையில் காலங்கழிக்க திமிர் பிடித்த தடியர்களும் சமூகமும் தயாராகயிருந்து வருகிறது. இதற்கு குறிப்பிடத்தகுந்த உதாரணங் களாக மத்திய ஆஸ்திரேலியாவில், அந்நாட்டுப் பெண்களை அதிக விலைகொடுத்து வாங்கும் ஆடவர் களுக்கு வியாபாரம் செய்வதும், இது போன்றே ஆப்பிரிக்காவிலும், ஆசியாவிலும் நடந்து வருவதும் எடுத்துக் காட்டத்தக்கது.

பிரான்சின் குடியேற்ற நாடுகளின் காரியாலைய அறிக்கையொன்று "சில வெள்ளைப் பெண்களை யேனும் அந்தப்புர அடிமைகளாக வைத்திராத சுதே சாதிகளே இல்லையென்றும், அதுவும் அந்தப் பெண் கள் பக்குவமடைந்தும், வயது வந்தும் இஷ்டப்பட் டால் பிரிந்துவிட யோக்கியதை உள்ளவர்களுமான வர்கள் இந்த அடிமைமோக வாழ்வில் அதிகரித்து வருகிறார்களென்றும், மற்றும் இந்த அடிமைத் தனத்தை நடக்கவொட்டாது தடுக்க முடியாது" என்றும் கூறுகிறது.

பிரிட்டிஷ் ஆதிக்கத்திற்குட்பட்ட **'பெக்கூனு'** தேசத்தில் (தென் ஆப்பிரிக்காவிலுள்ளது) அடிமை கள் சாட்டையாலடிக்கப்பட்டும், தோல்கள் உரிக் கப்பட்டும் பெரும் கஷ்டத்திற்குள்ளாகிறார்கள்.

சிவப்புக் கடல் ஓரங்களில் வாழும் மக்கள் பல வந்தமாக திருட்டுத்தனமாக கப்பலிலேற்றப்பட்டு அடிமைகளாக்கப்பட்டு அரேபியாவில் கப்பல் மார்க்கமாக தூக்கிச் செல்லப்படுகிறார்கள். இந்தக் கோரக் காக்ஷியானது பிரிட்டிஷாரின் சிவப்புக் கடலைச் சார்ந்த கப்பற்படை போலீஸ் முன்னேயே நிகழ்கிறது.

ஆப்பிரிக்காவில் நூறாயிரக்கணக்கான அடிமை கள் கொடிய வெயிலில் பரிதாபகரமாக உழைத்து உழைத்து சாகிறார்கள். ஆங்கு சின்னஞ்சிறு கிராமாந்திரங்களில் வாழும் பெண்களும் குழந்தை களும் கதறக் கதறத் தூக்கி வரப்பட்டு நிரந்தர மான அடிமை வாழ்க்கைக்கு விற்கப்படுகிறார்கள்.

இந்த அநாகரீக கொடிய காரியங்களைத் தடுக்க சில ஆதிக்கமிக்க அரசுகளும் தவறி வருகின்றன. உதாரணமாக அரேபியாவைச் சேர்ந்த 'ஜெட்டா' என்ற இடத்தில் உள்ள அடிமை மார்க்கட் வியா பாரஸ்தலத்தை அந்நாட்டு சர்க்கார் தடுக்கவில்லை. இந்த இடம் ஆட்சியாதிபதியிருக்கும் இடத்தி லிருந்து 300 கஜ தூரத்தில்தான் இருக்கிறது. அதோடுங்கூட ஹெட்ஜாஸ் ராஜ்யத்தில் அடிமை களை வைத்திருப்பவர்கள் ஒவ்வொருவரும் இரண்டு இங்கிலீஷ் பவுன்கள் அபராதமும் கொடுக்க வேண் டிய சட்டமுமிருக்கிறது.

அடிமைகள் ஒழிப்புச் சங்கக் காரியதரிசியான சர் **ஜான் ஹாரிஸ்** என்பார் ''சைனாவிலும் ஆப்பிரிக் காவிலும் 5,000,000 அடிமைகள் ஆண்களும், பெண்களும், குழந்தைகளுமாக இருக்கிறார்களென் றும், அதோடு அபிசீனியாவில் (ஏன், இந்த உலகத் திலேயே) கணக்கற்ற அடிமைகளைத் தங்கள் கை யிருப்பில் வைத்திருப்பவர்கள் கிருஸ்தவ சர்ச்சே யென்றும், இது போன்ற சர்ச்சு 540 என்றும்

அதற்கு மடாலயங்களும் பிஷப்புகளும் வேறு'' என்றும் சொல்கிறார்.

''சைனாவிலுள்ள அடிமை வியாபார மார்க்கட் ஸ்தலங்களில் குழந்தைகள் ஆடுகளைப்போல் விற்கப் படுகிறார்கள். அழகிய யுவதிகள் பூனைகளின் விலையை விட ரொம்ப குறைந்த விலைக்கு வாங்கப்படுகிறார் கள். பத்து வயதுள்ள பாலன் சில ஷில்லிங்கு களுக்கு விற்கப்படுகிறான். 'சோடாங்' (Shantung) என்ற நகரத்தில் ஓர் அழகிய கட்டிளங் குமரியைவிட ஒரு பூனைக் குட்டியே அதிர்ஷ்டம் வாய்ந்ததென்று வாஸ்தவத்தில் கருதுகிறார்கள். சைனாவின் இந்தப் பகுதிகளிலுள்ள கொடியப் பஞ்சத்தின் காரணத் தால் 4000 வனப்புமிக்க அழகிகள் 12 மைல் தூர முள்ள நகரங்களுக்கு தூக்கி செல்லப்பட்டு ஒவ் வொருவருக்கும் அற்ப ஷில்லிங்குகளுக்காக விற்கப் படுகிறார்கள்'' என்று சர் ஜான் அவர்களின் மனைவி யார் லேடி சைமான் எழுதுகிறார்.

1934-ம் வருஷத்தில் ஜப்பானில் ஏற்பட்ட வெள்ளச் சேதம், பிளேக், பயிர்களின் க்ஷீணிப்பு ஆகிய காரணத்தால் ஒரு ஜில்லாவில் மட்டும் 627 வாலிபப் பெண்கள் துராக்கிருதமான விபசார விடுதிகளுக்கு, வாழ்க்கை முழுதும் அடிமையி லாழ்ந்து சாக (பெற்றோர்கள் 3 பவுனிலிருந்து 90 பவுன்கள் வரை பெறும் கடன் தொகைகளுக்காக) விற்கப்பட்டிருக்கிறார்கள்.

ஆகவே இத்தியாதி விஷயங்களிலிருந்து, இன் றைய உலகிலும்—மக்கள் ஆடுமாடுகளைப் போல் வாங்கவும், விற்கவும் படுகிறார்களென்பதோடு— அவர்கள் படும் அவஸ்தைகளுக்கும், உயிரோடு தோல் உரிக்கப்படும் கொடுமைகளுக்கும் நாடு என்னென்று சொல்வது?

**'புது உலகம்'**
செப்டம்பர், 1935.

# 8. பொருளாதாரக் குறிப்பு
## ECONOMIC NOTES

**மக்கள்** நடத்தை முழுமையும், பொருளாதாரத்தால்ஆளப்பட்டுவருகிறதென்பது உண்மையே. மக்களின் எந்த நடத்தையாயினும், பொருளாதாரத் தூண்டுதலால் நடைபெறுகின்றது. பசியைத் தணிக்க வேண்டியதாயினும், சம்போக வேட்கையை திருப்தி செய்ய வேண்டியதாயினும், அல்லது மக்களது மூன்ருவது அத்தியாவசியமாகிய திரேகத்தை சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டியதாயினும், மற்ற எந்த வேட்கையை அடைய வேண்டியதாயினும், சகல நடவடிக்கைகள் யாவும் பொருளாதாரமே. கடவுளை வணங்குவதும், பரலோக வாழ்வும், பொருளாதாரத்தை அடிப்படையாகப் பெற்றுள்ளன. இகத்தில் கோரும் வாழ்வையே பரத்திலும் நித்தியமாக இருக்கக் கோருகின்ருேம். ஆடல் பாடல், சங்கீதமும் பொருளாதாரத்திற்கு அதீதப்பட்டவைகளல்ல. மெஞ்ஞானமே பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது. மக்களது வாழ்க்கை முழுமையும் பொருளாதாரத்தில் அடங்கியுள்ளன. ''பொருளில்லானுக்கு இவ்வுலகம் இல்லை'' என்ற முதியோர் வாக்கியத்தாலும், உலக வாழ்க்கை, பொருளாதாரமில்லாமல் நடத்த முடியாதென்பதை உணர்த்துகின்றது.

துறவிக்கும் பொருளாதாரம் வேண்டியதாய் இருக்கிறது. உலகை வெறுத்து விட்டேன் என்று சொல்லிக் கொள்ளலாமேயொழிய, உலகப் பொருள் இல்லாமல் எந்தத் துறவியும் உயிர் வாழ முடியாது. உண்மையில் உலகை வெறுத்தவனுக்கு தற்கொலை தான் முடிவு. வாழ வேண்டுமானல், பொருளுதவி

இருத்தல் வேண்டும். தோட்டி முதல் தொண்டமான் வரை பொருளாதாரம் வேண்டும்.

கோயில் குளங்கள் கட்டுவதற்கும், பக்தி செலுத்துவதற்கும் பொருளாதாரம் வேண்டும். முக்திக்கு வழிகாட்டும் சாமி சன்யாசிகளுக்கும் பொருள் முக்கியமாக வேண்டும். மாபெரும் துறவு பூண்ட கௌதம புத்தருக்கும், விகாரங்களுக்கும், சன்யாசி கூட்டங்களுக்கும், அவர்களுக்குத் தகுந்த ஆடை அனுகூலங்களை, பக்தர்கள் உழைத்துத் தேடி கொடுக்க வேண்டியதாய் இருந்தது. உலகிலுள்ள எந்த உயிரும் பொருளாதாரமின்றி ஒரு வினடியேனும் வாழ முடியா. துறவிக்கு வேந்தன் துரும்பு என்று சொல்வது வெறும் சொல்லோடு, வீண் டம்பச் சொல்லாகும். ஏனெனில், அரசன் பாதுகாப்பின்றி, துறவியும் வாழ முடியா.

எல்லா அரசும் பொருளாதாரமின்றி நடைபெறு. அன்றுடம் அரசு செலுத்த பொருள் வேண்டும். போதுமான பொருள் ஆதரவு இன்றி எந்த அரசும் நிலைக்காது. உள்ளூர் காப்புக்கு சிப்பந்திகள் வேண்டும். வெளியூர் காப்புக்கும் படைகள் வேண்டும். எந்தவித சிப்பந்தியாயினும், அது சேவகப் படையாயினும், ராணுவப் படைகளாயினும் பொருளாதாரம் வேண்டும். அரசு நடக்க வேண்டுமானால், வரவுக்கும் செலவுக்கும் பொருத்தமிருக்க வேண்டும்.

தேச சரித்திரங்களும், பொருளாதாரத் தூண்டுதலால்தான் நிறைவேறி வந்து இருக்கின்றன. வர்த்தகப் பலத்தால், அயல் நாட்டைக் கைப்பற்ற வேண்டி வரும் ஒரு காலத்தில் வேலை ஆட்கள் வேண்டியிருந்தபடியால், இந்த உள்நாட்டு வேலையைச் செய்ய அடிமைகள் வேண்டியதாய் இருந்தது: அடிமைகளை கைப்பற்ற, அயல் நாட்டை பிடிக்க

வேண்டி வந்தது. இவ்விதமாக அந்தந்த தேசத்து பொருளாதார நிலைமைப்படி, அந்தந்த தேச சரித்திரமும் நிகழ்ந்து வந்தது. தற்கால உலகில், மகா சண்டையின் பிறகு, நெருக்கடி அதிகரித்து வருகின்றது. ஏன்? சண்டைக்கு பிறகு ஒவ்வொரு நாட்டிலும் பொருளாதாரத் தாழ்வு ஏற்பட்டது. இந்தப் பொருளாதாரத் தாழ்வால் மக்களுக்கு வேலை இன்மையும், வறுமையும், பஞ்சமும் நேர்ந்தது. இதனால் கலகங்களும், குழப்பங்களும், புரட்சிகளும் உண்டாகின்றன. தற்கால உலக நெருக்கடி, மகாயுத்தத்தால் நேர்ந்த பொருளாதாரத்தால்யென அறிதல் வேண்டும்.

தற்கால மேல் நாடுகளில், நாஸிஸமும், பாஸிஸமும் தோன்றுவதற்கு முக்கிய காரணமென்னவெனில்,அந்தந்த நாடுகளில் தாங்கமுடியாத பொருளாதார நெருக்கடி நேர்ந்த படியால்தான். இந்த நெருக்கடியிலிருந்து தப்பித்துக்கொள்ளச் செய்து வரும் நாஸிஸ்ட், பாஸிஸ்ட் கட்சிகளும் அபிஸீனியாவை, முசோலினி படை எடுப்பதும், தனது நாட்டின் பொருளாதாரத் தாழ்வாலென அறிக. நேற்று குபேர தேசமாயிருந்து வந்த அமெரிக்க நாடு,இன்று செய்து வரும் பகீரதபிரயத்தனங்கள் யாவும், அதன் பொருளாதாரக் கேட்டை ஒழுங்குபடுத்த வேண்டியே, செய்யப்பட்டு வருகின்றன! உலகம் சுகப்பட வேண்டுமானாலும், அல்லது குழப்பத்தில் அழிய வேண்டி வந்தாலும், எல்லாம் பொருளாதார உயர்வையும், தாழ்வையும் பொருந்தியது.

**'புது உலகம்'**
*அக்டோபர், 1935.*

## 9. இனி நமது சந்ததியாருக்கு பிதுரார்ஜிதமென்ன?

## WHAT SHALL OUR POSTERITY INHERIT FROM US ?

நமது உலகில் மனிதனுக்கு அறிவு தோன்றி சுமார் 10 லட்ச வருஷமென்கின்றார்கள். முன்னும் பின்னும் கவனிக்கத் தகுந்த அறிவு இதுவே. இவ் வறிவின் கிளர்ச்சியால், தனது சந்ததியாருக்கு, மண்ணையும், பொன்னையும் வைத்து அவர்கள் தங்களது காலத்திற்கும் பிறகு ஜீவிக்கச் செய்யும் பழக்கம் இந்த அறிவால் ஏற்பட்டது. நாம் இறந் தால், நமது பிள்ளை குட்டிகளுக்கு ஜீவனம் செய்ய என்ன ஆதரவு ஏற்பாடு செய்ய வேண்டுமென்ற கவலையே, மற்றெல்லா கவலைகளைவிட விசேஷப் பட்டக் கவலையாய் இருந்து வருகிறது. ஒருவன் சம்பாதிக்கும் செல்வ முழுமையும் தனது சந்ததி யாருக்கே வைத்துவிட்டு சாகின்றான். சிலர் மாத் திரம் தங்கள் சம்பாத்தியத்தை தானே செல வழிப்பது ஏக தேசம். பெரும்பான்மை மக்கள், தங்கள் பிதுரார்ஜிதத்தை தத்தம் சந்ததியாருக்கே வைத்துச் செல்கின்றார்கள்.

இந்த ஆசை, மனிதனுக்கு மாத்திரம்தான் இருந்து வருகிறது. மற்ற உயிர்களில், அதனதன் சந்ததி சீவிக்க சக்தி பெற்றதும், அவைகள் கைவிடப் படுகின்றன. ஆனால், மனித சந்ததியாருக்கு மாத் திரம், தாங்கள் சீவிக்க சக்தி பெற்றும், பொன்னோ, மண்ணோ வைக்க வேண்டியதாயிற்று. இந்த அவசியம் எப்படி ஏற்பட்டிருக்க வேண்டுமென்றால், பொதுவாக, மக்களின் சந்ததியாரை, பொது மக்கள் கவனியாதபடியால், அவரவர் சந்ததியாருக்கு சொத்தோ, செல்வமோ, எதையாகிலும் வைக்க வேண்டிய அவசியம் நேரிட்டிருக்கவேண்டும். இந்தப்

பழக்கத்திலிருந்து, பிதுரார்ஜிதமென்றால், ஏதாகி லும் பணமோ, பொருளோ, நீர் நிலமோ என்று வழங்கவாரம்பித்தது. தற்கால நாகரீகத்தில், பிதுரார்ஜிதமென்றால், பொன்னும், பொருளும், நிலமும், நீருமென்று வழங்கி வருகின்றது.

தற்கால உலகில், மக்களின் பிரயாசை பெரும் பான்மையும், இந்தப் பிதுரார்ஜிதத்தை சேர்த்து வைக்கவே செலவாக்கப்படுகிறது. இந்தப் பிதுரார்ஜிதத்தைச் சேர்த்து வைக்க, பலர் பலவிதபிரயாசை எடுக்க வேண்டி வருகிறது. கோர்ட்டு, கொத்தளம், சூது வாது, மோசம், நாசம் இந்தப் பிரயாசைக்கு வேண்டியதாயிற்று. ஒருவரேனும் எவ்வளவுதான் தத்தம் சந்ததியாருக்கு வேண்டுமென்பதை சிந்தித்தாரில்லை. அவரவர்கள் பெருமைக்குத் தகுந்தபடி தங்கள் சந்ததியார் வாழவேண்டுமென்று அவா மேலிட்டிருப்பதால், இவ்வளவுதான் தங்கள் சந்ததியாருக்கு வைக்கவேண்டிய அளவு என்று நிர்ணயிக்கவில்லை. தன் செலவுபோக, எவ்வளவு சேமிக்கப் பட்டாலும்சரி, அவ்வளவும் தங்கள் சந்ததியார் அடையவேண்டியதே சரி என்று முடிவு கொள்கிறார்கள். இந்த வழக்கத்தை ஆதரித்து வர, சகல கோர்ட்டுகளும், சகல சட்டங்களும் ஏற்பட்டுள்ளன.

இவ்வளவு பிரயாசைப்பட்டு, சேமித்த செல்வம், அது சந்ததியாருக்குச் சென்றால், என்ன கதியாகின்றது? பத்தில் ஒன்பது குடும்பத்தின் பிதுரார்ஜிதம் கள்ளுக்கும், சுள்ளுக்கும், பரத்தையர்க்கும், வம்புக்கும், தும்புக்கும் செலவிட்டு நாசமாய் விடுகின்றது. உழைக்கும் அருமை, உழைத்தவனுக்கன்றோ தெரியும். உழைக்காத சோம்பேறிகளுக்கு என்னும்!!! இதுதான், தற்கால உலக நடவடிக்கை. கஷ்டப்பட்டோ, கஷ்டப்படாமலோ, சேமித்த அப்பொருளை, சந்ததியார் அடைகின்றனர். அடைந்த

பொருளை, சூறையாடுகின்றனர்!! இதுவே, நமது நாகரீக நடத்தை.

இத்தியாதி பிதுரார்ஜிதங்களை நமது சந்ததி யாருக்கு வைத்து வருகிறபடியால் அவர்கள் நம்மை விட அறிவீனர்களாய் உலக முற்போக்குக்கும் இடங் கொடாமலே, வீண் டம்பத்திலும், வீண் செலவி லும், வீண் வியர்த்தத்திலும் உலக செல்வங்களை செலவழித்து, பல்லாயிரம் மக்கள் பசித்து வருந் தவும், தங்கள் மாத்திரம் உலக போகங்களை அனுப விக்கவும் நேரிடுவதை பிரத்தியட்சமாய் நாம் பார்த்து வருகிறோம்.

உலக செல்வங்களை, தங்கள் தனிச் செல்வ மென்று கருதி, மனம்போன போக்கெல்லாம் செலவழிக்க நேரிடுகிறது. **இவ்வித அழிவை தடுக்க வேண்டுமானால், நமது சந்ததியாருக்குச் சேரும் பிது ரார்ஜிதம் யாவும், பொதுவார்ஜிதமாக மாற வேண்டும்.** நமது சந்ததியார் இவ்வித பொதுரார்ஜிதத்தைக் கொண்டு, தங்கள் வாழ்வை பொதுவாக நடத்திக் கொள்ள வேண்டும். இது முடியுமாவென்று கேட் கலாம்? ஏன் முடியாது? உலகில் வாழும் மற்ற உயிர்கள் யாவும், கற்பகாலமாக உலக செல்வங்களை பொதுவுடைமையாக பாவித்து தத்தம் வாழ்வை நடத்திக் கொள்ளவில்லையா? நேற்று உலகில் மனிதன் தோன்றினவன். அதற்கு முன், பல கோடி வருஷங்களாக, மற்ற உயிர்கள் யாவும் பிதுரார் ஜிதம் யாதொன்றுமின்றி, வாழ்ந்து வரவில்லையா?

மக்களுக்குள்ளும், பல கோடி பல்லாயிரவர், பிதுரார்ஜிதமின்றி, பிழைத்து வரவில்லையா? உல கில் உள்ள 200 கோடி மக்களில் 190 கோடி மக்க ளுக்கு கைப்பிடி மண்ணுங்கூட பிதுரார்ஜிதமாக கருத இடமில்லையே. மற்ற 10 கோடி மக்கள்தான் உலகப் பொருள்களை தங்கள் பிதுரார்ஜிதமாக

பாவித்துக் கொண்டு சண்டையிலும், சூதிலும், வீண் டம்பங்களிலும், வியர்த்தங்களிலும் செலவு செய்து, உலகில் வறுமையும், தரித்திரமும், பசியும், பிணியும் அதிகரிக்க இருந்து வருகின்றனர்.

இவ்வித பிதுரார்ஜிதத்தை சேமித்துக் காப்பாற்றி, தத்தம் சந்ததியாருக்கு வைக்கவேண்டி, இன்னும் பலவித பிதுரார்ஜிதங்களை உண்டாக்கி வருகின்றோம். நமது சந்ததியாருக்கு நாம் வைப்பது நிலமும், நீரும் மாத்திரமல்ல. இன்னும் அந்தந்த வித பிதுரார்ஜிதங்களை நமது சந்ததியாருக்கு வைத்து வருகின்றோம். கோர்ட் கொத்தளங்களும், சண்டையும் போரும் நமது சந்ததி சந்ததியாக பிதுரார்ஜிதமாக வைக்கின்றோம். அழிவையும், நாசத்தையும் பிதுரார்ஜிதமாக வைக்கின்றோம். இல்லாத கடவுளரை பிதுரார்ஜிதமாக வைத்து வருகின்றோம். பயமும், திகிலும் பிதுரார்ஜிதமாக வைக்கின்றோம். வறுமையாலும், இல்லாமையாலும் நேரிடும் திருடு, கொலை, களவு முதலிய பஞ்சமா பாதகங்களையும் நமது பிதுரார்ஜிதங்களாக வைக்கின்றோம். அறியாமையும், அக்கியானமும் பிதுரார்ஜிதங்களாக வைக்கின்றோம். பொறுமையும், வஞ்சனையும் பிதுரார்ஜிதங்களாக நமது சந்ததியார் அடைந்து வருகின்றார்கள்.

இன்னுமொரு பெரிய பிதுரார்ஜிதமொன்றுண்டு. அதாவது, தேசீயமென்ற பிதுரார்ஜிதம். இந்தப் பிதுரார்ஜிதத்தால் விளையும் தீமைக்கு அளவே இல்லை. மகாயுத்தங்கள், அயல் நாடென்று வழங்கும் நாடுகளை தாக்குதல். பல்லாயிரம் பேரை கொடும் போருக்கு காவு கொடுத்தல் **The dogs of war** என்று வழங்கும் யுத்தத்தின் நாய்களாகிய பசி, பஞ்சம், கொள்ளைநோய் முதலிய பீடைகள் ஆகியவற்றை நமது சந்ததியார் அடைகின்றார்கள். நமது சந்ததி

யார் நம்மிடமிருந்து அடைந்து வரும் நன்மை ஒரு பங்காஞல், தீமைகள் ஒன்பது பங்காக முடிகின்றது. நமது நடவடிக்கையை கவனிப்போமாகில், நமது உயிருக்கும் உலே வைக்கும் தீங்கிழைக்கும் நடவடிக்கைகளேயே, நமது சந்ததியாரும் அடைந்து வருகின்ருர்கள். பண்டைகால மாடுபிடிச் சண்டை முதல் தற்கால நாடுபிடிச் சண்டை வரை, எல்லா சண்டைகளேயும், நமது சந்ததியாருக்கு பிதுரார்ஜிதங்களாக நாம் வைத்து வருகின்ருேம். உலக தீமைகள் யாவும் நாம் தேடிவைத்த பிதுரார்ஜிதங்களே! நமது சந்ததியார் பெரும்பான்மையாக இந்தப் பிதுரார்ஜிதங்களே, ஒரு சந்ததியிலிருந்து அடுத்த சந்ததிவரை, காலாகாலங்களாக மக்கள் அடைந்து வருகின்ருர்கள். இனியும், இவ்வித பிதுரார்ஜிதங்களேயா நமது சந்ததியார் அடைய வேண்டும்? இந்தத் துக்கம் நிறைந்துள்ள உலகையா நமது சந்ததியாருக்கு இனியும் வைக்கப் போகின்ருேம்? நமது முன்ளேர்கள் தெரியாமல் நமக்கு வைத்த கொடிய பிதுரார்ஜிதங்களேயா, நமது சந்ததியாருக்கு நாமும் வைக்க வேண்டும்?

**'புது உலகம்,**
அக்டோபர், *1935.*

---

## 10. மதம் மாறுதலால் பயனுண்டா?

(சமதர்மி)

**ம**தங்கள் யாவும் கற்பனேகள். மதங்கள் கூறும் கடவுளரும், பேய் பிசாசுகளும், சித்தாந்தங்களும், கோட்பாடுகளும் வெறுஞ் சொற்கள். இச்சொற்

களுக்குப் பொருந்திய பொருளுமில்லை. ஆதலின் ஒரு சொல்லை நம்புவதை விட்டு விட்டு, மற்ரேர் சொல்லை நம்புவதால் வரும் பயன் யாதொன்றுமில்லை, கடவுளென்ற சொல்லை எடுத்துக்கொள்ளுவோம். கடவுளை, ஒரு மதஸ்தன் ''சிவன்'' என்கின்ருன். இன்ஞெரு மதஸ்தன் ''விஷ்ணு'' என்கின்ருன். மற்ரேர் மதஸ்தன் ''பரிசுத்த ஆவி'' என்று அழைக்கின்ருன். இந்த சொற்கள் குறிக்கும் பொருள் ஏதாகிலுமிருந்தால், அதனை யாரும் பார்த்ததுமில்லை, பரிசித்ததுமில்லை, முகர்ந்ததுமில்லை. அந்தப் பொருள்கள் ஒன்று இருக்குமேயாயின் அதைப் பற்றி ஒன்றும் தெரியாத வரை, எந்தப் பெயரை நம்பினுலென்ன? சிவனை நம்புகின்றவன், விஷ்ணுவை நம்பினுல் என்ன? அல்லாவை நம்பினுல் என்ன? ஆவியை நம்பினுல் என்ன? எல்லாம் வெறுஞ் சொற்களே. ஓர் அறியாமையிலிருந்து. இன்ஞெரு அறியாமைக்கு மாறுவதால் என்ன பிரயோஜனம்? என்ன லாபம்? என்ன நஷ்டம்? ஓர் ஆப்ரகடாப்ராவை *(Abracadabra) விட்டு விட்டு, மற்ரேர் காடலெப்ராவுக்கு (Cadalabra) மாறுவானேன்? இதைவிட பெருத்த உன்மத்தம் என்ன இருக்கிறது? இது என்ன பித்தமென்று கேட்கின்ரேம்? இவ்வித மாறுதலைக் கோரும் பெரியோரின் மதி என்னும்?

பிசாசைக் கோருகின்றவனும், நம்புகின்றவனும், எந்தப் பிசாசை நம்பினுலென்ன? கோரினுலென்ன? மக்கள் எதைத்தான் கும்பிடாதிருக்கின்ருர்கள்? கல்லை, செம்பை, காற்றை, ஜலத்தை, மரத்தை, செடியை, பட்சியை, பாவியை, ஆட்டை,

---

* **'ஆப்ரகடாப்ரா', 'காடலெப்ரா': ஆதிமனிதன் ஏதோ வந்ததை வாயினுல் உச்சரித்து அதற்கு ஒரு பெரும் சக்தி இருப்பதாகப் பாவனை செய்து வந்த சொற்கள்.**

மாட்டை, சூலத்தை, சக்கரத்தை, இடியை, மின்னலை, சிலுவையை, பிறையை தொழுகின்றார்கள். இவைகளில் எதைத் தொழுதாலென்ன? தொழாவிட்டாலென்ன? ஒன்றிலிருந்து மற்றொன்றுக்கு மாறினாலென்ன? மூடத்தனத்தில் உயர்வு தாழ்வுண்டோ ?

எந்தக் கடவுளை நம்பி யார் சுகப்பட்டார்கள் என்று கேட்கின்றோம்? சண்டை போடாமல் இருக்கின்றார்களா ? மோசம், தந்திரம், வஞ்சகம் செய்யாமலிருக்கின்றார்களா? கொலை, களவு, கள், காமம் முதலிய பஞ்சமாபாதகங்களைச் செய்யாதொழிகின்றார்களா? எந்த மதஸ்தன் பரிசுத்தவான் என்று சொல்லக்கூடும்? உலக முழுமையும் தேடினாலும், எந்த மதஸ்தனும், பூரண பரிசுத்தமானவனென்றாகிலும், பூரண பாபி என்றாகிலும் சொல்வதற்கில்லை. உலகம் அப்படி இருக்க எந்த மதம் உயர்ந்தது? எந்த மதம் தாழ்ந்தது? மதங்களில் உயர்வு தாழ்வு எவ்வித அளவைக் கொண்டு நிர்ணயிப்பது? மதங்களுக்குள்ளே உயர்வு தாழ்வு ஏற்படாவிட்டால், மக்களுக்குள் உயர்வு தாழ்வு எப்படி ஏற்படும்?

ஒரு மதத்தை அனுசரித்து வரும் மக்கள் சமூகம், எந்த விதத்தில் வேறு மதத்தை அனுசரித்துவரும் ஜன சமூகத்தைவிட உயர்ந்தது? மதங்களில் கட்டுண்ட சமூகங்களில் ஏழை இல்லையா? மகாராஜர் இல்லையா? உயர்ந்தவர் இல்லையா? தாழ்ந்தவர் இல்லையா? வறுமை இல்லையா? அறியாமை இல்லையா? நோயில்லையா? கஷ்டமில்லையா? உயர்ந்தவன் தாழ்ந்தவனென்ற வித்தியாசமில்லையா? மனித உலகம் உண்டானது முதல், இத்தியாதி வித்தியாசங்கள் இருந்துவர, ஒரு மதத்தைவிட்டு, இன்னோர் மதத்தில் மாறுவதால், எல்லா மதங்களிலு

முள்ள குறைபாடுகளை மக்களை எப்படி பாதிக்காம லிருந்து?

ஒவ்வொரு மதமும் முதலாளியை ஆதரிக்கிறது. உயர்வு தாழ்வை ஆதரிக்கிறது. பிறப்பில் வித்தியாசத்தை உண்டு பண்ணுகிறது. Brotherhood of man, Fatherhood of God. மக்கள் யாவரும் சகோதரர்கள், எல்லோருக்கும் கடவுளொருவரே பிதா என்று சொல்வதெல்லாம் வெறுஞ்சொல் என்பதற்கு, உலகில் நடந்து வரும் போர்க்கோலங்களே போதுமான சாட்சியாகும். மதங்கள் யாவும் இவ்வளவு அக்கிரமங்களை ஆதரித்துவர, எவர் எந்த மதத்தைச் சேர்ந்தாலென்ன? எவர் எந்த மதத்தை விட்டு எந்த மதத்தைத் தழுவினுலென்ன?

முரட்டுத்தனம், பிடிவாதம், எல்லா மதங்களிலுமுண்டு. ஆனல் எந்த மதத்திலும் Tolerance அதாவது அபிப்பிராய சுதந்திரம் இல்லை. இந்த சுதந்திரத்தை அடையவேண்டி, கொல்லப்படாதார் யார்? இம்சிக்கப்படாதார் யார்? இவ்வாறு மதங்களின் குணதிசயங்கள் இருக்க, எந்த மதத்தை விட்டு, எந்த மதத்தைச் சேர்ந்தால் இக்கொடுமைகள் ஒழியும்? ஒன்பது ''சனியன்''களில், எந்த ''சனியன்'' உயர்ந்தது. எந்த ''சனியன்'' தாழ்ந்தது? புத்திமான்கள், எல்லா ''சனியன்''களையும் விட்டொழிக்கப் பார்ப்பார்களேவொழிய, ஒன்றை விட்டு மற்றொன்றில் மாற நினையார்.

மதங்கள் யாவும், இவ்வுலக வாழ்க்கையை இகழ்ந்து, மேலுலக கற்பனைகளைப் போற்றுகின்றன. எனவே மத மாறுதலால், இவ்வுலக வாழ்க்கை, எவ்விதம் ஒருவருக்கு அனுகூலப்படும்? மதங்கள் யாவும், இறந்த பிறகுதான் அழியா சுகம் உண்டு என்று கூறுகின்றன. ஆனல் ஒரு மதத்திலிருந்து இன்னோர் மதத்தில் குதிப்பதால், உயிருடன் வாழ

வேண்டிய நமக்கு, என்ன நன்மை விளையப் போகின்றது? இவ்வுலக வாழ்க்கைக்கு உதவாத மதங்கள் இருந்தென்ன? இல்லாவிட்டாலென்ன?

எந்த மதமாவது மக்களுக்கு அவசியமா? என்னத்திற்கு அவசியம்? வயிராற உண்பதற்கா? நோயில்லாமல் வாழ்வதற்கா? சண்டை இல்லாமல் சமாதானத்திற்கா, வீட்டுக்கா, வாசலுக்கா மதம் வேண்டும்? ஆடலுக்கா,பாடலுக்கா மதம்வேண்டும்? ஓடி விளையாடுவதற்கா மதம் வேண்டும்? ஒருவரை நேசிப்பதற்கா, ஒருவரை ஒருவர் அன்பு கொள்வதற்கா, நற்பிள்ளைகளை பெறுவதற்கா மதம் வேண்டும்? சுத்தத்திற்கா, சுகாதாரத்திற்கா மதம் வேண்டும்? ஜாதி சமயங்களை ஒழிப்பதற்கா மதம் வேண்டும்? நன்மையைக் கடைப் பிடித்து, தீமையை விலக்குவதற்கா மதம்வேண்டும்? எதற்கு மக்களுக்கு மதம் வேண்டும்? இத்தியாதி நடத்தைகளுக்கு மதம் வேண்டாமென்றால் மற்று எதற்கு வேண்டும்?

உலகில் மனிதன் நேற்று தோன்றினவன். இவன் உலகில் தோன்றுவதற்கு முன்னிருந்து வரும் கோடான கோடி மற்ற உயிர்களுக்கு, மதம் வேண்டாமல் உயிர் வாழ்ந்துவர, இவனுக்கு மாத்திரம் மதம் ஏன் வேண்டும்? மதமில்லாமல், மனிதன் உயிர்வாழ முடியாதென்றால், மற்ற உயிர்கள் பல கோடி வருஷங்களாக மதமின்றி வாழ்ந்து வருவானேன்? அவைகள் வாழ்ந்துவர, நாம் மாத்திரம் மதமின்றி ஏன் வாழமுடியாது.

மதங்கள், மக்களை மயக்க உண்டானவை. மதங்கள், மக்களை அறியாமையில் வைக்க உண்டானவை. மதங்கள், மக்களின் அறிவின்மையில் உதித்தவை. இது வாஸ்தவமானல், எந்த மதத்தை தழுவுவது? எந்த மதத்தை விடுவது?

எல்லா மதங்களும், அறியாமையால் நீடித்து வருகின்றனவே வொழிய, ஞானத்தால் அல்ல. இந்த ஞானத்தை பரவச் செய்வதே, அறிஞர்களின் அழகாகும்.

**'புது உலகம்'**
நவம்பர், **1935**.

---

## 11. குற்றமும் தண்டனையும்

### "CRIMES & ITS PUNISHMENTS"

*(By Eninent Lawyer)*

**எந்த** நடத்தை சமூக வாழ்க்கைக்கு விரோதமான நடத்தையோ அதனை தண்டிக்க அரசாங்கத்தாரால் விதிவிலக்குகள் செய்யப் படுகின்றன. அந்த நடத்தையை குற்றம், அதாவது, Crime என்பார்கள். சட்டத்தால் தண்டிக்கப்படும் நடத்தையை குற்றமெனலாம். அதற்கு பிரபல திருஷ்டாந்திரமாக பீனல் கோடு சட்டத்தை எடுத்துக் கொள்ளலாம். நமது இந்திய பீனல் கோடு ஓர் உலகறிந்த பிரபல சட்டம். இதைப் போன்ற சட்டங்கள், அந்தந்த ஊர்களில் இயற்றியுள்ளார்கள். அந்தந்த ஊர்கள், தாங்கள் குற்றமெனக்கருதும் நடத்தைகளைத் தான்,தண்டனைக்குட் படுத்துவார்கள். குற்றமென்று கருதப்படும் நடத்தைகள், தேசத்திற்கு தேசம் வித்தியாசப்படும். ஆனால்,பெருத்த குற்றங்களெனப் படும் நடத்தைகள் உலகில் எல்லா தேசங்களில் தண்டிக்கப்படும். கொலை, களவு, மோசம் முதலிய பெருத்த குற்றங்களை உலக முழுமையும் தண்டிக்க வேண்டிய நடத்தைகளென்று வகுத்துள்ளார்கள்.

ஆனல் சில சமயங்களில், இதே நடத்தைகள் நேர்ந்தால் குற்றமாகாவென்றும் விலக்குகளுமுண்டு. இவைகளில், அரசாங்க குற்றங்களை முதன்மையாக அருவெறுக்கத் தக்க நடத்தைகளென்று வகுத்துள்ளார். ஏனெனில், மற்ற குற்றங்கள் இரண்டொருவரை பாதிக்குமாம். ஆனல் அரசாங்க குற்றங்களோவெனில் பலரை பாதிக்குமாம். ஆனல், ராஜாங்க குற்றங்கள் வேறு பல காரணங்களுக்காக முக்கியமாக கவனிக்கப் படுகின்றது. அக் காரணங்கள் எவை எனில் முதலாவது, அரசுக்கு அபாயம் வருமா என்ற பயம் அரசை நடத்துவோர்களுக்குண்டு. இரண்டாவது, அரசாங்க குற்றங்கள் அதிகரிக்குமானல், அரசாங்கத்திற்கு மரியாதை இல்லாமற்போகும். மூன்ருவது, அரசாங்க குற்றங்களால், அரசுக்கு மதிப்பில்லாமற் போனல், பொது ஜன பலம் அதிகரிக்கும். இத்தியாதி காரணங்களால், அரசாங்க குற்றங்களை முதல்தரக் குற்றங்களென மதிக்கப்பட்டு வருகின்றன.

இத்தியாதி குற்றங்களுக்கு விதிக்கப்பட்ட தண்டனையும் அதிகம். புரட்சி முதலிய குற்றங்களுக்கு கடின தண்டனையே விதிக்கப்பட்டிருக்கிறது. ராஜாங்கத்தாரோடு போர் புரட்சி செய்கின்றவர்களுக்கு தலையை வாங்கும், அதாவது, மரண தண்டனை விதிக்கின்ருர்கள். ஆனல், இந்தக் குற்றங்களை ஊர் பிரஜைகள் செய்தால்தான் தலை வாங்கும் தண்டனையைக் கொடுக்கின்ருர்கள். அயல் நாட்டு ராஜாங்கம் போர்செய்தால் அவர்களைக் கடூரமாக தண்டிப்பதில்லை. ஏனெனில், அயல் நாட்டார் கொலை செய்வதில்லையாம். யுத்தம் செய்வதாம்! யுத்தத்தில் நடக்கும் கொலைகள், கொலையாகாதாம்!! இதுவோர் கற்பிதம். It is a fiction. கொலையில் ஏன் இந்த வித்யாசப்பட்டதென்ருல், தாங்களும் அயல் நாட்டை படை எடுத்தால், தங்களை சாதாரண

கொலேஞனென்று கருதப்படாமல் இருக்க வேண்டியே. நாம் கொன்ருல், அவர்களும் நம்மை கொல்வார்களே என்ற பயம் நாகரீக காலத்தில் உண்டாயிற்று. ஆதியில் சண்டையில் பிடிப்பட்டவர்களைக் கொன்று வந்தார்கள். நாளடைவில் அக்கொடுமை மாறி, சண்டையில் பிடிபட்டவர்களை சிறை பட்டவனென்று அழைக்கின்ருர்கள். இந்த மனப்பான்மை நாகரீக மனப்பான்மையாகும். காட்டு மிராண்டிகளில் சண்டையில் பிடிபட்டவர்களைக்கொன்று வருகின்ற பழக்கம் ஆப்பிரிக்கா தேச காட்டு மிராண்டிகளில் பார்க்கலாம்.

அரசாங்க குற்றத்தை முதல்தரக் குற்றமென்பார்கள். மக்கள் திரேக குற்றங்களை இரண்டாந்தரக் குற்றமென்பார்கள். அவைகளாவன: கொலை, காயப்படுத்துதல் முதலிய திரேகத்தைச் சேர்ந்த குற்றங்களாகும்.

இதற்கு பிந்தி, பொருள்களின் பேரில் செய்யும் குற்றங்களை மூன்ரும்தரக் குற்றமென்று வகுக்கப்பட்டுள்ளது.

அரசாங்க குற்றம் (Crimes against Government), திரேகக் குற்றம்(Crimes against the Body), பொருள் குற்றம் (Crimes against property). இம்மூன்றுவித குற்றங்களை முதல்தர குற்றம், இரண்டாந்தர குற்றம், மூன்ருந்தரக் குற்றங்களென வகுத்துள்ளார்கள்.

இந்தக் குற்றங்களுக்கு தண்டனையும் தக்கவாறு விதித்துள்ளார்கள். குற்றவாளியை கொலை செய்வது, சிறையிலிட்டு வேலைவாங்குவது, அடிப்பது, அபராதம் விதிப்பது இத்தியாதி தண்டனைகளை விதித்துள்ளார். இத்தியாதி தண்டனைகளை அனேக நாகரீக தேசங்களில் கொடுத்து வருகின்ருர்கள்.

தண்டனைகளால், குற்றங்கள் குறையுமென்று பலநாளாகக் கருதுவதுண்டு. ஆனால், அனுஷ்டானத்தில், குற்றங்கள் உலகில் குறைந்தபாடில்லை. கொன்றவனைக் கொல்லும் தண்டனை, குற்றவாளியை சீர்படச் செய்யாதொழிக்கின்றது. திருடினவனை கடின வேலையைக் கொடுத்து தண்டிப்பதால் பொருளை இழந்தவனுக்கு எந்த லாபமும் கிடைப்பதாக இல்லை. காயப்பட்டவன், தனக்கு காயமிழைத்தவனை தண்டிப்பதால், தனது காயத்திற்குப் பரிகாரம் கிடைத்தபாடாகா. செய்த குற்றத்திற்கும், அதற்கு கொடுக்கும் தண்டனைக்கும் சம்பந்தம் இருப்பதாகக் காணோம். இது விஷயமாக, Criminologists குற்றங்களைப் பற்றியும், அதற்குத் தண்டிக்கும் வகைகளைப் பற்றியும் விசாரிக்கின்ற விஞ்ஞானிகள் இரண்டு வகையாகப் பிரித்துள்ளார். முதல் வகுப்பார், குற்றங்கள் செய்தவனை தண்டிப்பதில் பயனில்லை; அவனை இனி குற்றங்களை செய்யவொட்டாமல், சீர்த்திருத்த மார்க்கப்படி தண்டிக்க வேண்டு மென்பார். இவர்கள் Reformists குற்ற சீர்திருத்தக்காரர்களென வழங்கப் படுவர். இரண்டாவது வகையார், கொலைக்கு கொலை, காயத்திற்கு காயம், திருடின பொருள்களுக்கு பொருள் கிடைக்கச் செய்வதே சரியான தண்டனையாகும் மென்பார். இவர்களை Retaliators என்று வழங்குவார்கள். இவர்களன்றியில், புதியதோர் வகுப்பார் குற்றங்களை விதிவிலக்குகளுக்கு உட்படுத்த வேண்டுமானால், குற்றங்கள் ஏன் செய்யப்படுகின்றன என அவைகளின் காரணங்களைக் கண்டறிந்து, சீர்திருத்தமோ, விதிவிலக்கோ ஏற்பாடு செய்ய வேண்டுமென்பார். காரணமின்றி காரியம் நடவாதாகையால், காரியத்தை தெரிந்த பிறகே, காரியத்தை விலக்க வேண்டுமென்பார் மூன்றாவது வகுப்பார். இம் மூன்றும் வகுப்பார் செய்துவரும் குற்ற

ஆராய்ச்சியின்படி சோவியத் ரஷ்யாவில் அதன் குற்றவாளிகளை நடத்துவதாக தெரிகிறது.

அரசாங்கக் குற்றம் எக்காரணத்தால் நிகழ்கின்றன? மக்களுக்குப் போதுமான சுதந்திரமும், பொருளாதார சமத்துவமும் இல்லாமையால், பெரும்பான்மை புரட்சிகள் உண்டாகின்றன.

புரட்சி ராஜாங்க குற்றமென்பார். ஆனால் எல்லா புரட்சியும் இராஜாங்க குற்றமாகா. இருக்கும் நிலைமையை துரிதமாக மாற்றினால் சிலர் இதனை சாந்தத்திற்கும், சமாதானத்திற்கும் விரோதமென்பர். மற்றும் சிலர், பொருக்கமுடியாத கொடுங்கோன்மையை திருத்தச் செய்யும் புரட்சியினை அவசியமான மாறுதல் என்பர். இந்த இரண்டு அபிப்ராயங்களும், அந்தந்த சமயத்திற்கு அதாவது அரசியல் நிலைமைக்கு பொருந்தும். எது புரட்சி, எது புரட்சி ஆகா என்பது அந்தந்த சந்தர்ப்பத்தை பொருந்தியது. பொதுவாக சொல்ல வேண்டில், அதிகாரத்திலிருந்து வரும் கட்சிக்காரரர் எதையெதை குற்றமென்று வகுக்கின்றார்களோ, அதுதான் குற்றமென்று தண்டிக்கப்படும். இதைத்தான் பொது அமைதிக்கு **Public Tranquility** விரோதமென்பர்.

ஆனால் எல்லாவித குற்றங்களும், பொருளாதாரக் குறைவால், அதனால் பாதிக்கப்பட்டவர்கள் செய்யும் குற்றங்களாகும். வயிறு நிரம்ப உணவும், மனிதனுக்கு வேண்டிய மற்ற சௌகர்யங்களும் எல்லோருக்கும் வழங்கப்படுமேயாகில், அல்லது அது கிடைக்க சந்தர்ப்பங்கள் ஏற்படுமேயாகில், குற்றமென்று வழங்கப்படும் நடத்தைகள் யாவும் அதிகமாக குறைவு படுமென்பதற்கு தடை இல்லை. குற்றங்கள் யாவும் வாழ்க்கைக்கு வேண்டிய அவசியங்களின் குறைவால் செய்யப்படுகின்றன. மக்கள் யாவருக்கும் சாதாரண வாழ்க்கைக்கு வேண்டிய சலுகைகள்

விநியோகிக்கப்படும் பட்சத்தில் எங்கும் திருப்தி உண்டாகி அமைதியும் சாந்தமும் உலகில் நிலவும். குற்றங்கள் உலகில் குறைவுபட இதுதான் மார்க்கம். வெறும் தண்டனையால், அதிருப்தியால் உண்டாகும் குற்றங்கள் குறைவுபடா.

**'புது உலகம்'**

நவம்பர், *1935.*

---

## 12. வாழு, வாழ விடு

### LIVE & LET LIVE

**(இமாலயதவசி)**

உயிர் உலகில் உண்டாகி, சுமார் *100* கோடி வருஷங்கள் இருக்கலாமென்று விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். இவ்வளவு வருஷங்களாக, பல கோடி உயிர்கள் இவ்வுலகில் வாழ்ந்து வந்து கொண்டிருக்கின்றன. அனந்தகோடி உயிர்கள் மாண்டன. அனந்தகோடி உயிர்கள் வாழ்கின்றன. வாழும் உயிர்களில் மனிதன் ஒருவன். இவன் உலகில் தோன்றி சுமார் *5, 10* லட்சம் வருஷமிருக்கலாம். உலகிற்கு இவன் கடைசி பிள்ளை. இவனுக்குப் பிந்தி இரண்டொரு உயிர்கள் தோன்றி இருப்பதாக விஞ்ஞானிகள் கூறுகின்றார்கள். இத்தியாதி உயிர்களில் ஒன்று சீலைப் பேனாய் இருக்கலாமாம். அழுக்கு சீலையை மனிதன் தரிக்கவும், சீலைப்பேன் பரிணமித்து இருக்கலாமென்பது ஒரு யூகை. சீலை தரிக்கின்றவன் மனிதனொருவனாதலால், அவன் சீலையை தரித்த பின்னரே, இந்த உயிர் சீலையில் வசிக்க மாறி வந்

திருக்கவேண்டும். அந்த யுக்திக்கு வேறொரு காரணமும் உண்டு. அதாவது சீலையை விட்டு, இந்தப் பேனுக்கு சீவிக்க முடியவில்லை. இத்தியாதி காரணங்களால், சீலைப்பேன் மனிதனுக்கு பிந்தியே பரிணமித்து அவனது சீலையில் வாழ தகுதியென்று இருக்க வேண்டுமென யூகிக்கலாம். மனிதனுடைய தலைப் பேனும், மனிதன் தோன்றிய பிறகே தோன்றி இருக்கலாமென்பதும் ஒரு யுக்தி. ஏனெனில், மனிதன் மயிரை விட்டு, தலைப்பேன் சீவிக்க முடியவில்லை என்றுதெரிகிறது. இந்த இரண்டொரு ஜீவன்களைத் தவிர, மனிதன் எல்லா உயிர்களுக்கும் பின்னுல் வந்திருக்கலாம்.

இவன் தன்னைத்தானே தற்கொலை புரிந்து கொள்ளா விட்டாலும் சரி, அல்லது ஆதி ஆத்மீகத் தாலாகிலும், அல்லது ஆதி பௌதீகத்தாலாகிலும், நாசமடையாமல் இருந்தாலும் சரி, உலகில் இன்னும் 200 கோடி வருஷம் வாழலாமாம். ஆனுல், இவனது நடவடிக்கையைப் பார்த்து வருகின்றவர்களுக்கு, மனிதன் இன்னும் சில ஆண்டுகளுக்குள் மடிந்துபோவானே என்கிற கிலேசம் தோன்றுமலிராது.

1. ஏனெனில் உலகில், மனிதருக்குள் தற்கொலை அதிகரித்து வருவதாக கணக்கு ஏற்பட்டு வருகின்றது. வேலை இல்லாமையாலும், வாழ்க்கை மேல் வெறுப்பாலும், தற்கொலை அதிகரித்து வருகிற காட்சி புலப்படுகின்றது.

2. சில நாகரீக நாடுகளில், பிறப்பு குறைந்து வரும் காட்சி வெள்ளிடை மலை போல் தோன்றுகிறது.

3. குடும்பத்தை ஆதரிக்க முடியாமல் சிசுக் கொலை அதிகரித்து வருவதாகவும் தெரிகிறது.

சீன தேசத்தில் பிறப்பு அதிகமாக இருத்தலால், சிசுக்கொலை அதிகரித்து வருகிறதாம். இது பொருளாதாரக் குறைவால் நேரிடும் வதை.

4. சில காரணங்களால், வேண்டு மென்றே சில நாடுகளில் சந்ததியை குறைத்து வருகின்றனர்கள். கர்ப்பத்தடை, மற்றோர் பக்கத்தில் பிறப்பை குறைத்து வருகிறது.

இந்தப் பித்தங்கள் மக்களுக்கு தலைக்கேறிவிடும் பட்சத்தில், மனித சமூகம் இரண்டொரு சந்ததியில் தற்கொலை புரிந்துக் கொள்ளக்கூடும். யாருக்கும் சந்ததி வேண்டாமென்றால், 100 வருஷத்திற்குள் மனிதப்பூண்டு உலகினின்று நீங்கிவிடும். அநேக உயிர்களின் பூண்டு நசித்து விட்டது போல் மனிதனும் சந்ததியற்று போகத் தடையில்லை.

5 இதனினும் கொடிய தற்கொலை ஒன்றுண்டு. அதாவது போர் முனையில் கோடிக்கணக்காக மக்கள் மாளுகின்றனர். போன மகாயுத்தத்தில், இரண்டு கோடிமக்கள் 4 வருஷத்தில் மாண்டனர்! இம்மாதிரி, உலகப் போர் நிகழுமேயானால் மனிதன் உலகை விட்டு போவதற்கு சில ஆண்டுகளுக்கு மேற்படாது.

6. சீக்கிரம் கொலை செய்யும் ஆயுதங்களும் அதிகப் பட்டு வருகின்றன. விஷக்காற்று, விஷவெடிகள், விஷத் துப்பாக்கிகள் அதிகரித்து வருகின்றன. சண்டை போடுவோரோடு, சண்டை போடாதவர்களும் மாள வேண்டி வருகின்றது.

ஆகவே இத்தியாதி முகாந்திரங்களால், மனிதனை உலகினின்று தொலைத்துவிட மனிதனே காரணமாயிருக்கின்றான். (தற்கொலை புரிந்து கொள்ளும் முறை வேறு எந்த சீவனுக்குமில்லை. மனிதனொருவனே, தற்கொலைக்கு ஆளாகின்றான்.) இந்தக்

காட்சி மனிதன் ஒருவனிடத்தே காண்கின்றோம். மற்ற உயிர்கள் தற்கொலை புரிந்து கொள்ளாத காரணத்தால், நீண்ட காலம் அவைகள் உலகில் வாழ்ந்து வருவதாகத் தெரிகிறது.

மனித வாழ்க்கைக்கு வேண்டியது மிகவும் சொற்பம். இந்த சொற்பத்தை இரண்டு மணி நேரத்தில் அடையலாம். அவ்வளவு சுளுவில் நமது வாழ்க்கை நடந்தேறும் பட்சத்தில், தற்கொலை ஏன் வேண்டும்? கர்ப்பத்தடை ஏன் வேண்டும்? சண்டையும் போரும் ஏன் வேண்டும்? உலக செல்வாக்கை படைத்துள்ள ஒவ்வொருவனும், மக்களை வாழவிடும் பட்சத்தில் மனித சமூகம் கற்ப காலம் ஏன் உலகில் நிலைத்திராது? நாமும் வாழ்ந்து மற்றவர்களையும் வாழவிடும் பட்சத்தில், மனிதப் பூண்டு பலகோடி வருஷம் உலகில் நிலைத்துவரும் என்பது நிச்சயம்.

உலகில் ஜன சமூகம் அதிகரித்துக் கொண்டே போனால், உண்ண உணவின்றி மக்கள் மாள்வார்களாம. அப்படி இருந்தால், தற்கொலையும் வேண்டியதே. கர்ப்பத்தடையும் வேண்டியதே. ஆனால் உணவு போதாமற் போகுமென்ற பயத்திற்கு யாதொரு ஆதாரமே இல்லை. உணவுப் பொருள் போதாமலிருந்தால், கோடான கோடி விலை மதிப்புள்ள உணவுப் பொருளை படுகுழியில் போட்டு புதைப்பானேன்? உலகில் வாழும் மக்களுக்கு உணவுப் பொருள் போதாமற் போகுமென்பது பொய். நாமும் வாழ்ந்து, பிறனையும் வாழ விடுவோமாகில், உலக மக்கள் ஆயிரம் பங்கு அதிகமாயினும், உலகில் போதாமை தோன்றவே தோன்றாது.

உலக நெருக்கடி போதாமையாலல்ல, அதிகத்தால் உலகில் நேரும் நெருக்கடிகளெல்லாம் என்று பொருளாதார நிபுணர்கள் கூறுகின்றனர். அதிகத்தால் பஞ்சம் வருவானேன்? இல்லாமை தோன்று

வானேன்? தானும் வாழ்ந்து பிறனையும் வாழவிடா மையால், உலக களஞ்சியம் ஏழைமக்களுக்கு உதவா மற் போகின்றது. இல்லாமை இரண்டு விதம்· இயற்கையாகவே உண்டாகும் வறுமை; நம்முடைய செய்கையால் உண்டாகும் வறுமை. வறுமை இயற்கை இல்லாமையால் அல்ல; செயற்கை இல் லாமையால் உலகு வருந்துகின்றது. "திரிசங்கு சுவர்க்க"த்தை நாமே சிருஷ்டி செய்துகொண்டு நாமும் வாழாமலும், பிறரையும் வாழவிடாமலும் இருக்கின்றோம். இதுதான் உலக நெருக்கடிக்கும், போருக்கும், உலக நாசத்திற்கும் காரணம்.

**'புது உலகம்'**
*நவம்பர், 1935.*

---

## 13. பொருளாதாரம்

"ஆதாயமில்லாதான் ஆற்றோடு போனான்" என்ற பழமொழியை மேற்கொண்ட காலம், நமது காலமாகும். இதைத்தான் முதலாளி கால மென்பர். தற்கால பொருளாதாரத் திட்டம், இந்த ஆதாயம், அதாவது, லாபமென்னும் அஸ்திவாரத் தின்மேல் கட்டப்பட்டுள்ளது. உலக பொருளா தாரத்திற்கு, லாபமே பிரதானம். வர்த்தகமானு லும் சரி, கைத்தொழிலானாலும் சரி, குடிக்கூலியானு லும் சரி, முதலீடு (Investment) ஆனாலும் சரி, நிலம் வாங்கினாலும், நீர் வாங்கினாலும் சரி, கடன் வாங்கினாலும், கடன் கொடுத்தாலும சரி, இவ்

வுலகில், எவ்வித காரியத்தை செய்தாலும் Does it pay? இது லாபம் தருமா என்ற கேள்வி மேல் நடைபெற வேண்டும். இதனால் வறுமை போகுமா? விளைவு அதிகப்படுமா? உண்ண உடுக்க உதவியாய் இருக்குமா என்ற கேள்வி, நமது உலக திட்டத்திற்கு அனாவசியம். இதனால் உலகம் அல்லது நாடு, அல்லது நகரம் சுகித்து வாழ முடியுமா? நோயற்று ஆயுள் விருத்தி ஆகுமா? மெஞ்ஞானம் அதிகரிக்குமா என்ற கேள்விகள், நமது பொருளாதார திட்டத் திற்கு அதீதம். போக்குவரத்திற்கு வசதியாய் இருக்குமா? உலக மக்கள் யாத்திரை செய்ய அனு கூலமாயிருக்குமா என்ற நோக்கமே நமது பொரு ளாதார திட்டத்திற்கு வேண்டியதில்லை. எந்தக் காரியத்தை செய்தாலும், படித்தாலும், பாடி னாலும், ஆடினாலும் இது லாபம் தருமா என்பதே உலக வாழ்க்கையின் நோக்கமாகும். இந்தக் காரியத் தால் உலகில் சாந்தமும், அமைதியும் நிலவுமா என்ற எண்ணமே நமது பொருளாதார திட்டத்தில் கிடையா.

சண்டையால் லாபம் வருமா? ஆயுதங்களால் லாபம் வருமா? விஞ்ஞான ஆராய்ச்சியால் லாபம் வருமா? படிக்க வைத்தால் லாபம் வருமா? வீடு கட்டினால் லாபம் வருமா? எத்தொழிலைப் புரிந்தா லும் லாபம் வருமா? விழித்திருந்தாலும் லாபம் வருமா? உறங்கினாலும் லாபம் வருமா என்பதே முதலிலும் நடுவிலும் கடைசியிலும், முக்கிய நோக்கமாகும். இந்த நோக்கமே எல்லாவித காரி யத்திலும் உட்புகுந்துளது. எவன் கெட்டாலும், எவன் வாழ்ந்தாலும் லாபமே பிரதானம்.

லாபமில்லாவிட்டால் எந்த வேலையும் நடவா. நிலத்தை விளையச் செய்யார், தண்ணீரைப் பாயச் செய்யார், சுகாதார வீடுகளைக் கட்டமாட்டார், ரயில், தந்தி, தபால் நடவா. தொழிற்சாலை நடவா.

பாங்கிகளை திறக்கமாட்டார், கடன் கொடுக்கார், கடனும் வாங்கார். உலகம் பசித்தாலும், வருந்தினாலும், பஞ்சத்தால் கட்டுண்டாலும், தொழில் செய்யாமல் இருந்தாலும், வேலை இல்லாமலும் கோடானு கோடி சோம்பித் திரிந்தாலும், லாபமில்லாமற் போமாகின், எந்த வேலையும், உதவியும் கிடையாது.

விளைந்த விளைவை, லாபமில்லாமற் போமாகின் அழித்து விடுவார். விரைத்த நிலத்தில் லாபமில்லாமல் இருந்தால், மறுமுறையும் உழுது, விளைய வொட்டாமல் அழித்துவிடுவார்கள். லாபமில்லாமற் போய்விடுமாயின், உண்ணும் உணவையும், உடுக்கும் உடையையும் நாசமாக்கி விடுவார்கள். இவ்விதமாக, இந்த ஆயிரம் பணமுடியைத் தரித்த, லாபமென்ற கொடிய பாம்பு, உலகைப் பிணைத்துக் கொண்டிருக்கிறது. இக் கொடிய நாகம் உலகைவிட்டு நீங்கும் வரை உலகம் சுகப்படாதெனை அறிக.

**'புது உலகம்'**
டிசம்பர் 1935—
மார்ச்சு 1936.

---

## 14. வேசித்தனமும - போக்கும் மார்க்கமும்

### PROSTITUTION AND THE WAY OUT

(சிந்தனைவாதி)

**வேசி**த்தனத்தைப் போக்க பண்டைகாலமுதல், நாளதுவரை மதங்களும், நீதிநெறி மார்க்கங்களும், அரசு கூட்டங்களும் சேர்ந்து தடை செய்து வந்தும், இத்தொழில், உலகை விட்டு ஒழிந்த

பாடில்லை. உலகில் இந்தத் தொழில், ஒரு பெருத்த வர்த்தகமாய் விட்டது. White slave traffic என்ற வெண்விலைமாதர் வர்த்தகம்,உலக முழுமையும் பரவி வருகிறது. அகில தேச கூட்டங்களும், பற்பல கட்டு திட்டங்களை உண்டாக்கியும், இந்த வர்த்தகம் நின்றபாடில்லை. சிலர் இந்த வர்த்தகம் உலகில் இருக்க வேண்டுமென்பார். இது இல்லாவிடில் குடும்பஸ்திரீகள் கற்பை இழக்க நேரிடுமென்பார்.

ஆனால், இந்தப் பழக்கத்தின் கொடுமை ஆண் பெண்ணோடு போவதில்லை. இவர்கள் சந்ததியாரை யும் இம்சித்து வருகிறது. உலகில் இந்தக் கொடுமையால் பாதிக்கப் படாதவர்கள் 100-க்கு 20, 25 பேரென்று கணக்கு எடுத்திருக்கின்றார்கள். இவர்கள் சந்ததியாரும், இவர்களுடைய நோயை அடைகிறார்களாம். இதென்ன கொடுமை? நிரப ராதிகளான குழந்தைகளையும் இந்தக் கொடுமைக்கு ஆளாக்கின்றோ மென்றால், இதனினும் கொடுமை வேறுண்டோ! Syphilis என்ற மேக வியாதியால் பீடிக்கப்படாத மக்கள் இல்லையாம். இவ்வளவு தூரம் இந்நோய் பரவி வருகிறதைப் பார்த்து வரும் அறிஞர், மனித பூண்டிற்கே கேடு வரும் என்று பயப்படுகின்றார்கள்.

வேசித்தனம் உலகில் பரவி வருவதற்கு காரண மென்ன? இதன் காரணத்தை இதுகாறும் அறியா மையே, இது பரவுதலுக்கும் காரணமாகும். அர சாங்கங்களும், மதங்களும், சமூக சீர்திருத்தக் காரர்களும், கண்மூடிக் கொண்டு, விபசாரத்தை நிறுத்த வேண்டுமென்று கட்டுத் திட்டங்கள் செய்து வந்தபடியால் எதுவும் பயன்படவில்லை. சமீபத் தில், நமது சென்னை நகரில் விபசாரம் கூடாதென்று சட்ட திட்டங்கள் உண்டாயின விலைமாதரை நகரத்தை விட்டு அப்புறப்படுத்தியும் பார்த்தனர். விலக்கப்போன கொடுமை நின்றதா? காரணத்தைப்

போக்காமல், காரியத்தை நிறுத்த முடியாதென்று யாரும் உணர்ந்தாரில்லை.

விபச்சாரத்திற்கான காரணமென்ன? விலைமாதர் ஏன் இந்தத் தொழிலை மேற்கொள்கின்றார்கள்? ஒரே காரணமுண்டு. அதாவது, அவர்களுடைய பொருளாதாரத் தாழ்வே அவர்களை இத் தொழிலுக்கு உசுப்பேத்துகிறது. ஏன் ஆண் மக்கள் இத் தொழிலுக்கு உடந்தையாகின்றார்கள்? இவர்களுடைய பொருளாதார உயர்வே. இதற்கு தூண்டுதலாய் இருந்து வருகிறது. உழைப்பில்லாமல் வந்த செல்வப் பெருக்கால், ஆண் மக்கள் இத் தொழிலுக்கு இடங்கொடுக்கவும், வயிற்றுக்கு வழியில்லாப் பெண் மக்கள் இத்தொழிலைப் புரியவும் நேரிடுகிறது. சம்பாதிக்காத செல்வப் பெருக்கு ஒருபக்கமும், வறுமை மற்றொரு பக்கமும் இருந்துகொண்டு, இத்தொழிலை வளர்த்துக் கொண்டு வருகிறது. செல்வப் பெருக்கையும், வறுமையையும் போக்கினால் அந்த க்ஷணமே வேசித்தனமும், விபச்சாரமும் நீங்கிவிடும். இது தான் வேசித்தனத்தைப் போக்கும் மார்க்கம். செல்வப் பெருக்கு ஒழிந்தால், மக்கள் உழைக்க வேண்டி வரும். வறுமை ஒழிந்தால், சுதந்திர வாழ்க்கை ஏற்படும். ஆண்களிடமுள்ள செல்வப் பெருக்கைப் போக்கி, பெண்களுடைய இல்லாமையை நீக்கி, இருவருக்கும் சரிசமத்துவ உழைப்பு கிடைக்கப் பெற்றால், ஒருவரை ஒருவர் ஏன் அவமதிக்கின்றார்கள்? ஒருவரை ஒருவர் ஏன் குறைவாக மதிக்கின்றார்கள்? இதன் உண்மை அறிய வேண்டுமாயின், இதனைப் பரிட்சித்து வரும் சோவியத் ரஷ்யாவைப் பாருங்கள்.

அம் மாபெரும் நாட்டில் ஆணும், பெண்ணும் சரிசமத்துவம் பெற்றனர். எந்த வேலையும் செய்ய, ஆணும் பெண்ணும் உரிமை பெற்றனர். வாழ்க்கையை நடத்த இருவரும் சமத்துவ சுதந்

திரம் பெற்றனர். வேலை இல்லை என்ற சொல்லாவது வேலை செய்யாதவன் என்ற சொல்லாவது கிடையாது. ஆணும் பெண்ணும் கூடிப்பிரியவும், சுதந்திரம் பெற்றனர். ஆனால், கூடிப்பிரிந்தாலும் அதன் பலனாகிய சந்ததியாரைக் காப்பாற்றும் பொறுப்பு இருவருடையதே. இந்தத் திட்டத்தில் யார்தான் பிரிவார்கள்? எனவே, ஆணும், பெண்ணும் குழந்தையும் சமத்துவமாக சேர்ந்த சம்சார வாழ்க்கையில், இம் மூவரும் பூர்ண சுதந்திரத்தைப் பெற்றனர். இந்தப் புதிய திட்டத்தில், ஆணும் பெண்ணும், உழைத்து சந்ததியைக் காப்பாற்றக் கடமைப்பட்டனர். கூடுவதற்கும், பிரிவதற்கும் சரி சமத்துவம் ஏற்பட்டு விட்டபடியால், பிள்ளைகளைக் காப்பாற்றும் கடமை, இருவருக்கும் சமத்துவமாக ஏற்பட்டு விட்டது. இதனால், கூடிய பிறகு பிரிவதற்கு வசதிகள் இல்லாமையாய்விட்டது. இவ்வித சம்சார வாழ்க்கையின் நன்மை என்ன?

முதலாவது, வேசித்தனம் அடியோடு நின்று விட்டது. ஏகதேசமாகக் காணப்பட்டாலும், மற்ற நாடுகளைவிட, ரஷ்ய நாட்டில் விபச்சாரம் அதிகக் குறைவாம்.

இரண்டாவது, ஒரு முறை கூடிய வாழ்க்கை, பிரிவுபடுவது அரிதாம். Divorce அதாவது, சம்சார வாழ்க்கையை விலக்கிக் கொள்வது, மற்ற நாடுகளைவிட மிகக் குறைவாம்.

மூன்றாவது, விபச்சாரத்தில் பிறந்த குழந்தை என்ற அபவாதச் சொல், அடியோடு ஒழிந்து விட்டதாம்.

நான்காவது, மதங்களால் கட்டுண்டு கிடந்த கலியாணமென்ற கூட்டுறவு, சமூக வாழ்க்கையில் ஒரு பகுதியாகக் கருதப்பட்டது.

ஐந்தாவது, உலகிலுள்ள மக்களுக்குள், 16கோடி மக்கள், ஆணும், பெண்ணும், குழந்தைகளும் புதிய தோர் உன்னத வாழ்க்கையைக் கையாள தலைப் பட்டனர். உலகம், இவ்வாழ்க்கையைப் பின் பற்றுமோ அல்லது தடை செய்யுமோ, அது எதிர் காலத்தில்தான் தெரியும்.

**'புது உலகம்'**

*டிசம்பர் 1935—மார்ச்சு 1936.*

---

## 15. கல்யாணமென்றால் என்ன?

### WHAT IS MARRIAGE

*(By An Eminent Lawyer)*

ஆணும் பெண்ணும் கூடி, குடும்ப வாழ்க்கையை நடத்துவதுதான் கல்யாணமாகும். இந்த வாழ்க்கை, புராதன வாழ்க்கை. இதுவோர் பண்டைகால வழக்கம். மனித மக்களுக்குள் மாத் திரமல்ல இந்த பழக்கம் இருந்து வருவது; மிருகாதி களிலும், பட்சி பறவைகளிலும் இந்தப் பழக்கத் தைப் பார்க்கலாம். ஆணும் பெண்ணும் இணை பிரியாது, தங்கள் குஞ்சுகளைக் காப்பாற்றும் பட்சி கள் அனந்தமுண்டு. கறுத்த பிராமணனொருவன் பசித்திருந்தபோது, ஆண்பட்சி அவனுக்கு இரை யானதும், பெண்பட்சியும் உடனே அவனுக்கு இரை யான 'மகா பாரத' கதை ஒன்று பட்சிகளுக்குள்ள இந்த அரிய விஸ்வாசத்தை விளக்கிக் காட்டுகிறது.

காட்டு மனிதனென்று வழங்கும் ஓர் உயர்தர வாலில்லாக் குரங்கு (Ourang Ootang) சிறையில்

பெண் இறந்ததும், ஆணும் இறந்ததாகக் கூறப்படுகிறது. இவ்விதமாக மிருகங்களிலும் மக்களிடத்து அருமையாகக் காணப்படும் ஆண்பெண் விசுவாசத்தைக் காணலாம். ஆதலின் குடும்பத்துடன் ஆணும், பெண்ணும் கூடி வாழும் வாழ்க்கை மக்களுக்குள்ளும், மிருகங்களுக்குள்ளும் புராதனமாகக் காணலாம். எனவே, கல்யாணமென்பது பண்டை கால வழக்கமென்கின்றோம். ஆனால் இந்தப் பழக்கத்தை, மனிதன் பேசத்தெரிந்து, எழுதத் தெரிந்ததும், ஒரு ஸ்தாபனமாக்கிக் கொண்டும் சட்ட திட்டங்களுக்குள் உட்படுத்தினான்.

முக்கியமாக கல்யாணத்தின் அறிகுறிகள் மூன்று. முதலாவது, ஆணும், பெண்ணும் கூடி வாழ்வது; இரண்டாவது, அவ்விதமாக வாழ்ந்து வருங்காலை மக்களைப் பெறுவது; மூன்றாவது, மக்களை ஈன்ற பிறகு, ஈன்ற மக்களைப் பாதுகாத்து வளர்ப்பது. இம் மூன்று நடவடிக்கைகளை, எந்த கல்யாணமென்ற கூட்டுறவிலும் காணலாம். பிள்ளை இல்லாத குடும்பங்கள் சிலவே. பெரும்பான்மை கல்யாண கூட்டுறவுகளில் இம்மூன்றுமிருத்தலைக் காணலாம்.

ஆதியில் ஆணும், பெண்ணும் சம்போகத்திற்காக கூடினதாக சிலர் அபிப்ராயப் படுகின்றனர். இந்த சம்போகம் முடிந்தவுடன், அந்த கூட்டுறவும் முடிவடைகிறது. இவ்விதக் கூட்டுறவு அனேக உயிர்களில் காணலாம். புழு, பூச்சி, மீன் முதலிய ஜந்துக்களில், சம்போகம் வரையில்தான் ஆண் பெண் கூட்டுறவு நிற்கிறது. அது முடிந்தவுடன், ஆணும் பெண்ணும்பிரிந்து போகின்றன. ஆனால், இதன் காரணமென்னவெனில், அதிகமாக மிதமிஞ்சி குஞ்சுகளைப் பெறுவதால், கூட்டுறவு நீடிக்க அவசியமில்லாமற் போகிறது. ஒரு தடவையில் ஒன்று, இரண்டு குஞ்சுகளையோ, பிள்ளைகளையோ பெறும் சீவன்களுக்கு, கூட்டுறவு நீடித்திருந்தால்தான், ஈன்ற குட்டிகள்,

குஞ்சுகள், பிள்ளைகள் இவைகள் காப்பாற்றப்பட்டு, சந்ததி விருத்தியாகும். இதன் நிமித்தம், அதாவது சந்தானவிருத்திக்காகவே, பல உயர்தரப் பிராணிகள் மனிதன் உள்பட தங்கள் ஆண், பெண் கூட்டுறவை நீடிக்கச் செய்து கொண்டன.

ஆதி மிருக மனிதருக்கும், இந்த கல்யாண சம்பந்தம் நீடித்திருந்ததாக யூகிக்க வேண்டுமானல், தற்காலத்தில் வாழும் நமது தூர பங்காளிகளாகிய, காட்டு மனித குரங்குகளினுடைய நீடித்த ஆண் பெண் கூட்டுறவால் தெரிந்து கொள்ளலாம். இந்த மனித குரங்குகள், ஒரு ஆணும், பெண்ணும் அல்லது ஒரு ஆண் இரண்டு மூன்று பெண்களுடன் தங்கள் இரண்டொரு மக்களோடு கூடி வாழ்வதைப் பார்க்கலாம். சில வேளையில் ஆண் குரங்கு தன்னுடைய குடும்பத்தை அபாய காலத்தில் காப்பதற்காகச் சண்டையிடுவதையும் பார்க்கலாம். இந்தக் குரங்குகளின் இயற்கை வாழ்க்கையைப் பார்த்தவர்கள், ஒரு பெண்ணுடன் ஆண் குரங்கு எக் காலமும் இணைபிரியாது என தெரிவிக்கின்றார்கள்.

இந்த பழக்கம், நமது மக்களது மிருக காலத்திலேயே தோன்றியிருக்க வேண்டும். இவர்களுடைய தூரப்பங்காளிகளாகிய வாலில்லாக் குரங்குகளும், ஒரு ஆணோடு ஒரு பெண் கூடி வாழ்வதிலிருந்து. நமது புராதன முதியோர்களும் இந்த கர்ப்பத்தைத் தழுவி வாழ்ந்திருக்கலாம். ஆதலின் Monogamy அதாவது, ஒரு ஆணும் பெண்ணும் கூடி வாழும் வாழ்க்கை புராதன வாழ்க்கை என்று எண்ண வேண்டும். இதனுடன், ஒரு ஆண் சில பெண்களுடன் வாழும் வழக்கம், நமது தூரப்பங்காளிகளிடமும் காணப்படுகிற படியால், நமது மிருக முன்னோர்களில் சிலர், ஒரு ஆண் சில பெண்களுடன் கூடி வாழ்ந்திருக்கலாம். அந்த Polygamy அதாவது

பல பெண்களுடன் வாழும் வாழ்க்கை. நமது மக்களிடமும் காண்கின்றோம்.

ஒரு பெண் பல ஆண்களுடன் வாழும் வழக்கம், மிருகங்களிடமும் காண்பதரிது. எந்த ஆணும் அந்த செய்கைக்கு இடம் கொடுப்பதில்லை. தற்கால வாலில்லா மனிதகுரங்குகளும், இந்தப் பழக்கத்தில் இல்லை. எனவே நமது மனித முன்னோர்களிடமும் Polyandary அதாவது ஒரு பெண்ணுடன் பல ஆண்கள் கூடி வாழ்ந்தது இல்லாமலிருக்க வேண்டும். இவ்வித வாழ்க்கை காட்டுமிராண்டிகளிடமும் காண்பதரிது. ஆனால் திபெத் Tibet என்ற இமாலய மலைப் பிரதேசததில் இவ்வித பழக்கம் இருப்பதாகச் சொல்கின்றார்கள். அதன் காரணம், அத்தேசத்து பொருளாதாரக் காரணத்தாலென இந்த விஷயத்தை விசாரித்தவர்கள் கூறுகின்றார்கள். திபெத்தில் பெண்கள் அதிகமில்லை. அவ்வூர் தேச வாசிகள், ஊர் ஊராய் திரியும் தேசாந்திரிகள். பெரிய குடும்பங்களுடன் திரிந்து உணவு சம்பாதிக்க முடியாது. இதன் நிமித்தம், இருக்கும் பெண்களைப் பங்கிட்டுக் கொள்ள அவசியமேற்பட்டிருக்க வேண்டும். Promiscuous Intercourse அதாவது, வரை முறையற்ற புணர்ச்சி ஆதி மனித கூட்டத்தில் வழங்கி வந்ததாக சில பூர்வகால சரித்திர சாஸ்திரிகள் கூறுகின்றார்கள். ஆனால், அவர்கள் கூறும் விஷயங்களுக்குப் போதுமான சாட்சியமில்லை என்று கல்யாண சரித்திரத்தில் விற்பன்னரான வெஸ்டர்மார்க் (Wester Mark) என்பார் கூறுகின்றார். தற்கால மனிதர்களிடத்தும், காட்டுமிராண்டிகளிடத்தும் இப்பழக்கம் கிடையாதென்றும் கூறுகின்றார். ஆதலின் ஏக தேசமாக, யாரோ ஒருவர் இவ்வித வாழ்க்கைக்கு உடன்பட்டிருந்தால், அது Unnatural அதாவது, இயற்கைக்கு மாறான வாழ்க்கை என்றாகிலும், அல்லது ஒரு தாறுமாறான பழக்கம் என்றாகிலும் (Aberration) சொல்லலாம்.

இந்த ஆதி பழக்கமாகிய ஒரு ஆணும் பெண்ணும் கூடிய கலியாண வாழ்க்கையை, மதங்களாலும், புரோகிதர் தந்திரங்களாலும், அறியாமையாலும், பல்வேறு கட்டுத் திட்டங்களால் கட்டுப்படுத்தி, ஆணுக்கும் பெண்ணுக்கும் வித்தியாசங்களை உண்டாக்கி, பெண்ணையும், பிள்ளையையும் அடிமையாக்கி, மக்கள் வாழ்க்கையை பாழ்படுத்திவிடப் பட்டிருக்கிறது. இந்தக் கொடுமைகளிலிருந்து ஆணையும் பெண்ணையும் விலக்கி, ஆணும் பெண்ணும் அவர்கள் சந்ததியும் சரிசமத்துவம் பெறச் செய்வதே, சமூக சீர்திருத்தக்காரர்களுடைய முதற்கடமையாகும்,

**'புது உலகம்'**
*டிசம்பர் 1935—மார்ச்சு 1936.*

---

## 16. பொருளாதாரக் குறிப்பு

**1934**-ம் வருஷத்தில் *24,00,000* பேர் பட்டினியால் மடிந்தார்களாம்; *1,20,000* பேர் பசிப் பிணியை தாங்காது தற்கொலை செய்து கொண்டார்களாம்; 50,00,00,000 பேர்கள் வரை, வயிற்றிற்கு சரியான சாப்பாடில்லாமல் திண்டாடினார்களாம். இவற்றில் *100*-க்கு *90* பேர் இந்தியரும் சீனர்களுமாவார்களாம் என்று ஒரு மேல் நாட்டு பத்திரிக்கை கூறுகிறது.

வளப்பம் நிறைந்த இந் நில உலகத்தில் வயிற்றிற்கில்லாமல் தற்கொலையாம்! பசிக்காக படுகொலையாம்! அந்தோ ஒரு பக்கத்தில் பொருள்

படைத்தவர்களும் முதலாளித்துவ அரசுகளும் எல்லாவற்றையும் சேகரித்து சேமித்து வைத்திருக்கின்றனர். மற்றொரு பக்கத்தில் அவர்களே மிகுதியான பொருள்களை எல்லாம் ஏழை எளியவர்கட்கு உதவாமல் நாசமாக்குகின்றார்கள். என்னே உன்மத்த உலகம் இது!

மேலே சொன்ன அதே வருஷத்தில் 2,60,000 கார்ட்லோடுகள் கொண்ட கோதுமையும், 2,80,000 டன்கள் சர்க்கரையும், 26,000 டன்கள் அரிசியும், 25,000 டன்கள் மாட்டிறைச்சியும் மார்க்கெட்டிற்குக்கூட அனுப்பப்படாமலே நாசமாக்கப் பட்டனவாம்!

முதலாளித்துவ உலகம் பிறர் உழைப்பில் ஜீவித்திருக்கவும், லாபமென்னும் பெயரால் இல்லாதவர்களிட (Havenots) மிருந்து கொள்ளை அடித்து உயிர்வாழ அவர்கள் செய்யும் அடாத செய்கையை என்னென்போம்.

இந்த சந்தர்ப்பத்தில், பல நாடுகளில் வேலையில்லாது திண்டாடுபவர்களுடைய கணக்கைப்பற்றி ஜினிவாவிலுள்ள இன்டர்நேஷனல் ஆபீஸ் கூறும் கணக்கு விபரத்தைக் கவனிக்க வேண்டுகிறோம்.

(எண்ணிக்கைகள் அத்தனை ஆயிரங்களை குறிப்பிடுகின்றன.)

| | 1930 | 1931 | 1932 | 1933 | 1934 |
|---|---|---|---|---|---|
| யுனைடெட் ஸ்டேட்ஸ் | 3500 | 8600 | 12300 | 15500 | — |
| கிரேட் பிரிட்டன் | 2066 | 2795 | 2921 | 2508 | 2162 |
| ஜெர்மனி | 3140 | 4573 | 5765 | 4804 | 2958 |
| இத்தாலி | 642 | 982 | 1130 | 1132 | 962 |
| பிரான்ஸ் | 12 | 147 | 277 | 313 | 419 |

இந்தியர்வைப் பற்றிய புள்ளிவிபரம் குறிப்பிடப் படவில்லே. அது எதுவாளுலும் மேற்காட்டியுள்ள பெருவாரியான புள்ளி விபரங்கள் முதலாளி அரசின் யோக்கியதாம்சங்களேக் காட்டப் போதிய அத்தாட்சியாகும். இதுபோன்ற வேலேயில்லாத் திண்டாட்ட அநாசாரங்களேயும் முற்கூறிய பொருளாதார சீர்கேடுகளேயும் ஒழிக்க,சமதர்ம பொருளாதார முறை ஒன்றே தகுந்த மருந்தாகுமென்பதை ஞாபகமூட்டுகிறோம்.

**'புது உலகம்'**
*ஏப்ரல், 1936.*

PUBLIC LIBRARY
14 FEB 1976